தென்மொழி

சாதல் நன்றே!

—★—

உன்றமிழ்த்தாய் கொடுஞ்சிறையில்! தமிழகமோ
வல்லடிமை உளச்சேற்றில்! மானம் காற்றில்!
நன்றனைத்தும் வடவன்கைச் சிதைந்தொழிய
எங்ஙனந்தான் மகிழ்கின்றாய்? நலிவிப் பாரைச்
சென்றெழித்துத் தமிழ்த்தாயை விடுவிக்கச்
சிறிதேனும் கவலையிலாய்! பொங்கல் பொங்கித்
தின்றிருக்க நாய்போலுந் நிரிகின்றாய்,
தமிழ்மகனே, நாணிலியே, சாதல் நன்றே!

—★—

—ம. இலெ. த.

சுறவம் (தை)

தி. பி. ஈஈஊஎ





கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 3 | தை தி. பி. 1997 (1966 சனவரி) | ஓலை 12

இற்றைத் தமிழ்த் தொண்டர்கள்.

புலி வேட்டைக்குப் புறப்படுகின்றான் ஒருவன். கத்தி, வேல், வாள், வேட்டெஃகம் அனைத்தையும் எடுத்துக் கொண்டு எங்ஙனமாயினும் தீமை விளைவிக்கும் அவ்வாட் கொல்லிப் புலியை வீழ்த்தியே திருவது என்ற உறுதியுடன் மலை நோக்கிச் செல்கின்றான். அண்டை அயலார் அவனைத் தடுத்து நிறுத்த முயல்கின்றனர். வீணாக அழிந்து போகாதே என்கின்றனர். அவன் மீறிச் செல்லவே, முட்டாள், "பைத்தியக்காரன்" என்று அவனை எள்ளி நகைக்கின்றனர். மனத்திலெழும் தயக்கத்தைத் தள்ளி வைத்துவிட்டு மலையினை அடைந்துவிடுகின்றான் அப்புது வேட்டைக்காரன். ஆனால் மேலே செல்ல அவனுக்கு அச்சம் வந்துவிடுகின்றது. துணையாக யாரேனும் வருவரா என்று சுற்றுமுற்றும் பார்க்கின்றான். அப்பொழுது சிலர் அங்கு வருகின்றனர். அவர்களைத் துணைக்கழைக்கின்றான். அவர்களோ. "காட்டின் உட்பகுதிவரை நாங்கள் வரமுடியாது...காட்டின் ஓரப்பகுதிகள் வரை வேண்டுமானால் வரமுடியும். அங்குப் புலிவந்தால் பார்த்துக் கொள்ளலாம் என்கின்றனர். சரி, வேறு வழியில்லை என்று அவர்களை அழைத்துச் செல்கின்றான். சிறிது தொலைவு நடந்ததும் அவர்கள் "ஐயா வேட்டைக்காரரே, உம்மோடு அவ்வளவு விரைவாக நடக்க எங்களால் முடியாது.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்: தங்கப்பா,
உரிமை, வெளியீடு: தாமரை, உலகமுதல்வி.
அச்சகம்: மித்திரா, கடலூர்-1.

அதுமட்டுமன்று. நடக்கையில் உம் வேலும் வாளும் எங்கள் மேல் இடிக்கின்றன. சுழல் வேட்டெஃகம் தற்செயலாக எங்களைச் சுட்டு விடுமோ என்று அச்சமாக உள்ளது. நாங்கள் தாம் பத்துப் பெயர் வருகின்றோமே.....புலியை ஒருகை பார்த்துக் கொள்ளலாம். இக் கருவிகளை எறிந்து விடுங்கள். அவை உம்மோடு இருந்தால் நாங்கள் வரமாட்டோம் என்கின்றனர். வேட்டைக்காரன் வேறு வழியில்லாமல் கருவிகளை எறிந்து விடுகின்றான். கூடச் செல்பவர் இப்பொழுது மகிழ்ச்சியாக அவன் தோள்மேல் கைபோட்டுக் கொண்டு ஆடிப்பாடிச் செல்கின்றனர். வேட்டைக்காரனும் அவர்களோடு சிரித்துப் பேசிச் செல்வதில் மகிழ்வு காண்கின்றான். பின்பு அனைவரும் காட்டின் ஓரங்களிலும் வெட்ட வெளிகளிலும், பாறை உச்சியிலும், நரிவளைகளிலும் புலியைத் தேடிப்பார்த்துச் சலிப்படைகின்றனர். வேட்டைக்காரனுக்கோ ஒரே சோர்வு. திரும்பச் சென்று எப்படி மக்கள் முகத்தில் விழிப்பது என்ற நாணம். உடன் சென்றவர்கள் மறைத்து வைத்திருந்த ஒரு புலித் தோலை எடுத்து அவனிடம் அளிக்கின்றனர். "எதற்காகப் புலியை வேட்டையாடும் தொல்லை, துன்பம்? இப் புலித்தோலைக் கொண்டு சென்று மக்களிடம் காட்டுவோம். நாம் புலியைக் கொன்றே இத் தோலைக் கொணர்ந்ததாக நம்பிவிடுவர்; நமக்குப் பாராட்டும் கிடைக்கும்.....இதற்காக வேண்டாததொல்லைப் படுவானேன்?" என்கின்றனர். வேட்டைக்காரனுக்கும் இஃது எளிதாகப் படுகின்றது. மறுநொடியே புலித்தோல் ஒரு கழியில் கட்டப்பெற்றுத் தூக்கிப் பிடிக்கப்படுகின்றது. வேட்டைக்காரன் வெற்றி வெட்டெஃகத்துடன் பெருமிதநடையிட்டு முன் செல்ல, அவனைச் சார்ந்தோர் புலிமறவன் வாழ்க! வாழ்க! என்று முழங்கிக் கொண்டு ஊருக்குள் வருகின்றனர். மக்கள் அவனுக்கு மாலையிட்டு வரவேற்கின்றனர். "பெரும்புலி மறவன்" என்ற பட்டம் அவனுக்குச் சூட்டப்படுகின்றது.

இத்தகைய புலி(த்தோல்) மறவர்கள்தாம் இன்று தமிழ்த் தொண்டர் என்ற பெயரால் தமிழகத்தில் உலாவருகின்றனர். பெருங் குறிக்கோளை நாடிச் செல்வதும், இடையில் நேரும் இடர்ப்பாடுகட்கு அஞ்சித் (தக்கதுணை நாடும் முயற்சியில் சோம்பித்) தகுதியற்ற துணைவர்களை நாடுவதும், அத் தகுதியில்லாரைத் தகுதியுடையவர்களாக வேனும் ஆக்க முயலாமல் அவர்கள் இழுத்த இழுப்பில் தாமும் சென்று, குறிக்கோளை அவர்களுக்காகத் தாழ்த்திக் கொள்ளுவதும், விளம்பரத்தாலும், வெற்றாரவாரத்தாலும் போலிக் காட்சிகளைக் காட்டித் தம் உயர் குறிக்கோள் நிறைவேறி விட்டதாகப் பறைசாற்றிப் புகழ்பெறுவதுமே இத்தொண்டர்களின் வேலை.

செம்மாந்த ஒரு கொள்கையினைத் தாங்கி உண்மை நெறி நடப்பார்க்குத் துணையாக வருவாரின் எண்ணிக்கை எப் பொழுதும் குறைவாகவேயிருக்கும். உயர்ந்த குறிக்கோளும், உண்மையும், நடுவு நிலைமையும், விருப்பு வெறுப்புகட் கேற்ப வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் பொதுவியல் மாந்தர்க்கு எட்டமுடியாத தாகவும், கசப்பூட்டுவதாகவும் கடைப்பிடிக்க வேண்டாததுவாகவுமே தோன்றும். இன்ன பொதுவியல மாந்தருள்தான் உண்மைநெறி நடப்பாரும் தமக்குத் துணை தேட வேண்டிநேரும். இப்பொதுவியல் மாந்தர் சில கொள் கைகளைச் சார்ந்து நின்றாலும், தாம் உண்மையுணர்ந்து அவ் வழி நில்லாமையால் அக்கொள்கைக்காக இறுதிவரை உழைக் கும் வன்மையும், இடையூறு கண்டஞ்சாத் திண்மையும் அவர் களிடத் திருப்பதில்லை. கொள்கையை வெறியாகக் கொள்ளு வாரே மிகுதி. நெறியாகக் கொள்பவர் மிகச்சிலரே. எப்ப டியும் இத்தகையாரைத் துணையாகக் கொண்டுதான் உயர்ந்த இயக்கங்களையும் நடத்த வேண்டுவதாகின்றது. இங்ஙிலையில் தான் இயக்கங்களை நடத்திச் செல்வோர் விழிப்பாக இருத்தல் வேண்டும். படைஞன் எவ்வாறு முதலில் தன் கத்தியைக் கூர்மையாகத் தீட்டிக்கொள்வது இன்றியமை யாததோ அவ்வாறே தொண்டரும் தம் துணைவரைத் தம் பணிக்குத் தகுதியுடையராக ஆக்கிக் கொள்வது முதல் இன்றியமையாமையாகும். துணைவரைத் தேர்ந்தெடுப்பதிலும் சிறந்தாரையே தேர்ந்தெடுத்துப் பின்பு அவரையும் எடுத்துக் கொண்ட வினைக்கேற்பச் செப்பமும் திண்மையும் உடையவ ராகச் செய்து கொண்டே ஒரு வினையினைத் தொடங்குதல் வேண்டும்...அதற்கெல்லாம் பொறுமையும் முயற்சியுமில்லா மல் எப்படியாவது விரைந்து ஒரு விளைவைக் கண்டுவிடல் வேண்டும் (அல்லது விளைவுபோற்காட்டிப் புகழ்பெற்று விடல் வேண்டும்) என்று துடிப்பதால் எப்பயனும் விளைவ தில்லை. ஆரவாரமும் போலி வினைப்பாடுகளுமே மிகுகின்றன. துணைவலிவு வேண்டித் தம் உயர்குறிக்கோளைக் காற்றில் விட்டுவிடுவார், மாம்பழத்தை அறுக்கக் கத்தியைத் தேடியும் பெறாமல் பின்பு அம்மாம்பழத்தையே விற்றுக் கத்தியை வாங்கிக் கொண்டவருக் கொப்பாகின்றனர்.

தமிழ்த் தொண்டர்கள் என்று பெயர்கூறிக் கொள்வா ரையும், அவர்கள் நடத்திவரும் தாளிகைகளையும்தான் பாருங் கள்! ஒருவருக்கொருவர் விளம்பரங்கள்! புகழ்மாலைகள்! பாராட்டுகள்! தினையளவு செயலுக்கும் பனையளவு படப்பிடிப் புகள்! இவையெல்லாம் எற்றுக்கு என்று கேட்டால் துணை வலிவு என்கின்றனர்! எல்லாரையும் அணைத்து இணைத்துக் கொண்டு செல்வதற்கு இதுதான் வழி என்கின்றனர். ஒரு வரைப் பாராட்டுவதால் என்ன தவறு என்று கேட்கின்றனர்.

பாராட்டுவதில் தவறில்லை. அப்பாராட்டு உண்மையான பாராட்டாக இருத்தல் வேண்டுமே! விளம்பரத்துக்கன்றி வேறெதற்கும் பயன்படாத ஒரு சிறு போலி வினையினையும் "அருந்தமிழ்த் தொண்டு!" என்று பாராட்டுவது பொய் கூறிப் பொதுமக்களை ஏமாற்றுவதாகாதா? இத்தகைய ஏமாற்று வினைகளை எடுத்துரைத்தல் கூடாதா? இதைக் கூறினால் தென்மொழி பிறரைப் பகைத்துக் கொள்கின்றது என்று பொருளா? இவ்வினைகளால் விளைந்த பயன் என்ன? அதையன்றோ எண்ணிப் பார்த்தல் வேண்டும்? மாநாடு கூடிக் கலைந்து விடுவதாலும், வானளாவப்பேசி வாயடங்கி விடுவதாலும், போராட்டம் தொடங்கிப் பொக்கென முடித்துக் கொள்வதாலும் எடுத்தவினை ஒன்றேனும் அரைகுறையாக வாவது முடிந்துள்ளதா என்றால் இல்லையே! புலியை ஒருதனி நின்றெதிர்த்துப் போராடி அதனைக்கொன்று கிழித்து விடத்தான்வேண்டுமென்பதில்லை. ஆனால் நம்வினை ஒவ்வொன்றும் நம்மை அக்குறிக்கோள் நோக்கி அழைத்துச் செல்வதாக இருத்தல் வேண்டும். பல்லாண்டுக்காலமாக அப்புலியைக் கொல்ல முடியாமலே போகலாம். ஆனால் அப்புலிக்காக நாடோறும் காட்டுள் நுழைந்து வேட்டைஃகமும் கையுமாய், மரத்துப் பரணிலும் நீர்நிலையருகிலும் பசியோடும் தகையோடும் காத்திருந்து காத்திருந்து எத்துணை இடையூறு நேரினும் தன் முயற்சியை விடாதிருக்கின்றானே, அவனே மறவன். அவனே தொண்டன். அதுவன்றிப் புலியைத் தேடுவதாகப் பறைசாற்றிக் கொண்டு, புலி வரவேண்டாத இடங்களிலெல்லாம் அதனைத் தேடுவது போல் பாசாங்கு செய்துகொண்டு, தன் போலி முயற்சிகளைப் புகைப்படம் பிடிப்பித்துத் தாளிகைகளில் வெளியிட்டுக் கொண்டிருக்கிறானே, அவன் மறவனல்லன்; தொண்டனல்லன்! போலிகளில் முதல்வகை!

இவற்றையெல்லாம் எடுத்துக் காட்டினால் தென்மொழி இவ்வாறு வாய்வீச்சு வீசுவதைத் தவிர இதுவரை என்ன செய்து கிழித்துவிட்டது! எழுதுவதைத்தவிர இவர்கள் என்ன செயலைச் செய்துகாட்டிவிட்டனர். என்று நம்மீது பாய்கின்றனர்.

கள்ளப்பணமும் தாளே; அரசினர் வெளியிடும் பணமும் தாளே. இரண்டும் ஒன்றுக்கொன்று வேறுபாடு கண்டு கொள்ள முடியாமலே இருக்கின்றன. கள்ளப்பணம் என்று அறியாதவரை மக்களும் அதனை மதிக்கின்றனர். இருப்பினும் பணப்புழக்கம் நல்லதுதானே என்றிராமல் அரசினர் கள்ளப்பணத்தை ஏன் தடை செய்கின்றனர்? உண்மைப் பணம் பொருளியல் அடிப்படையில், அரசினர்பால் உள்ள பொன்னின் அளவுக்கேற்ப அமைந்த கணக்குப்படி வெளியிடப்படுகின்றது. அரசினர் பணத்தாள் உண்மையில் ஓர்

உறுதிமொழிச் சீட்டே. அவ்வுறுதிமொழிச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள 'பொருள்' உண்மையிலேயே அரசினர்பால் உள்ளது. ஆனால் கள்ளப்பணத்தாள் பொருளில்லாதவன் வழங்கும் போலி உறுதிமொழிச் சீட்டு. அச்சீட்டுக்கு எந்தக் கணக்கிலும் 'பொருள்' ஒதுக்கப் பெறவில்லை. அது பொய்ச் சீட்டு. இவ்வேறுபாட்டினைப் போன்றதுதான் செயலடிப் படையில் எழும் சொல்லுக்கும், செயலடிப்படையில்லாத வெற்றுச் சொல்லுக்கும் உள்ள வேறுபாடு. சொல் வேண்டா என்று நாம் எவ்விடத்தும் கூறவில்லை. அச்சொல் செயலினைத் தூண்டுவதாக, செயல் வேட்கையினின்றும் பிறந்ததாக, செயலை நோக்கி நம்மை அழைத்துச் செல்வதாக இருத்தல் வேண்டும் என்றே தென்மொழி கூறுகின்றது.

தென்மொழியின் வினைகள்பல விளம்பரத் தன்மை வாய்ந்தனவாக இல்லாமல் இருக்கலாம். அதுபோன்றே தென்மொழி தான் செய்துவரும் வினைக்குத் தரும் பெயரும் விளம்பரத்தன்மை வாய்ந்ததாக இல்லை. அதுமட்டுமன்று, தென்மொழி சில அடிப்படைகளை உருவாக்கி வருகின்றது. தன் கருவியாற்றலைப் பெருக்கிக் கொண்டு வருகின்றது. தன் இயக்கம் உண்மையானதாகவும், உறுதிவாய்ந்ததாகவும் இறுதிவரை கட்டுத் தளராததாகவும் வினையை நிறைவேற்றியே தீரும் விடாப்பிடி உடையதாகவும் இருத்தல் வேண்டுமென்பதற்காகத் தென்மொழி தோன்றி மறையும் எவ்வகை உடனடி நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளாமல், தன் குறிக்கோளை நிறைவேற்ற உண்மைத் தகுதியுடையராகச் சிலரையேனும் உருவாக்குதல் வேண்டுமென்றுதான் அல்லும் பகலும் அயராதுழைத்து வருகின்றது. தென்மொழியின் கண்டிப்புக்கும் கடுமையான இடித்துரைகட்கும் இச்செம்மாந்த கொள்கையே காரணம். தென்மொழிக்குப் பிறர்தம் மறைமுக எதிர்ப்புகள் இருந்து வருவதற்கும் இதுவே காரணம். மற்றபடி ஒரு சிலரின் நிழற்படங்களைத் தென்மொழியில் வெளியிட்டு அவர்தம் அரும்பெருந் தமிழ்த்தொண்டு(!)களைப் புகழ்ந்து அழகிய பாராட்டுரைகளை வழங்கிவருவது கடினம் அன்று. அவ்வாறு செய்யின் தென்மொழியின் அருந்தமிழ்த் தொண்டினைப்பற்றி(!) வேறு தாளிகைகளும் பாராட்டுகளை வெளியிடக் கூடும். இதழுக்கு விளம்பரமும், துணைவர் குழாமும் பெருகுதல் கூடும். ஆனால் இத்தகைய வெற்று விளம்பரத்தையும் ஆரவாரத் துணையினையும் தென்மொழி விரும்பவில்லை. அவற்றால் எட்டுணைப் பயனும் விளையாது என்று தென்மொழி நன்கு தெளிந்துள்ளது.

சிற்றினம் அஞ்சும் பெருமை; சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும். —த.

கோலாலம்பூரில் கொண்டான்மார் கூத்து!

வருகின்ற மேழ மாதம் க-ஆம் பக்கல் (14-4-1966) முதல் உ-ஆம் பக்கல் (15-4-1966) வரை, பொதியத்தின் பெயராற் பெயர் பெற்றதும், குமரி நாட்டுப் பாண்டியர் சாலியொடு (சாவகத்தீவோடு) கைப்பற்றி ஆட்சி செலுத்தியதும், இன்றும் தமிழர் பலர் தம் தமிழப் பண்பாடு கெடாது தழைத்து வாழ்வதுமான மலேயா நாட்டுத் தலைநகரான கோலாலம்பூரில் 'உலகத் தமிழ்ப் பேரவை'ச் சார்பில் பெரும் பொருட் செலவில் நடைபெறவிருக்கும் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு, இந்தியாவின் பல்வேறு பல்கலைக் கழகங்களின் படிநிகராளியராக(Reparsentatives)ச் செல்லவிருக்கும் ஐம்பதின்மருளிட்டு உலகத்தின் பல்வேறு பாகங்களினின்றும் செல்லும் விடைமுகவர் (Delegate) இருநூற்றுவருள், தமிழின் இயல்பையும் வரலாற்றையும் வளத்தையும் சிறப்பையும் நன்கறிந்தவரும் மொழியாராய்ச்சியில் முற்றத் துறைபோயவருமான, தவத்திரு மறைமலையடிகள் வழியினர் ஒருவரேனும் அமையாதிருப்பது, தமிழுக்கும் தமிழர்க்கும் தமிழறிஞர்க்கும் இழிவு தரத்தக்க நிகழ்ச்சியாகவே தோன்றுகின்றது.

இம்மாநாட்டுத் திருக்கூத்தை ஆட்டிவைப்பவர், இன்று மலேயாப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராய் அமர்ந்திருக்கும் திரு. தனிநாயகம் என்பார். இவர் அண்ணாமலை நகரில் பேரா. தெ. பொ. மீ. அவர்களின் அறுபான்விழாப் பாராட்டாளருள் ஒருவராக வந்து, தம் பணியைச் செவ்வனே ஆற்றியவர். இதனின்று, இருவழித் தமிழறிஞருள் இவர் எவ்வழியினர் என்பதை உணர்ந்துகொள்ளலாம். கிறித்தவ சமய குரவர் பணிக்கென்று சிறப்புப் பயிற்சியும் பட்டமும் பெற்ற இவர், அப்பணியில் ஈடுபடாது எவரும் புகத்தக்க திறந்தமடமாகிய தமிழ்த்துறையிற் புகுந்து தனிநாயகம் பெறவிரும்பியது ஒரு தனிச்சிறப்பே.

அமெரிக்க நாடு சென்று தம் ஆங்கிலப் பேச்சுவன்மையால் அந்நாட்டு மக்களை இணக்கி, தமிழ் வளர்ச்சிக்கென்று பெருந்தொகை தொகுத்து வந்ததாகவும், அதைக் கொண்டு முதற்கண் தூத்துக்குடியில் தமித்து நடத்தி வந்த தமிழ்ப் பண்பாடு என்று பொருள்படும் தலைப்புக் கொண்ட ஆங்கில இதழிகை (Tamil Culture) வெற்றி பெருமையால், சென்னை சென்று சென்னைப் பல்கலைக் கழகத்திலும் பல பெருங்கல்லூரிகளிலும் தலைமைத் தமிழ்ப் பதவி தாங்கும் பேராசிரியன்மாரைக் கொண்ட ஒரு குழுவை அவ்விதழிகை யாசிரியர் குழுவாக அமைத்து, அதில் தம்மைத் தலைமைப் பதிப்பாசிரியராகக் குறித்துக் கொண்டதாகவும், கேள்வி. அவ்விதழிகை

யில் வரும் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளெல்லாம் பிறரால் எழுதப் பெற்றவையே.

அவ்வாங்கில இதழிகை சென்னையில் நிறுவப்பெற்றதே அவர் சிறப்புத் தொடக்கமாயிற்று. அதன்பின், இலங்கைப் பல்கலைக் கழகத்திலமர்ந்து அதினின்று மலையாப் பல்கலைக் கழகத்திற்குத் தாண்டியுள்ளார்.

இதுவரை நூல்வாயிலாகவோ சொற்பொழிவு வாயிலாகவோ தமிழுக்குச் சிறந்த தொண்டு எதும் அவர் செய்ததாகத் தெரியவில்லை. அவர் கட்டுரைகளெல்லாம் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே இருக்கும். தமிழிலிருப்பவை யெல்லாம், தமிழ்நூல்கள் எந்தெந்த நாட்டு நூல்நிலையத்திலிருக்கின்றனவென்றும், தமிழ்ப் பாடல்கள் எந்தெந்த நாட்டு விழாவிற் பாடப்படுகின்றனவென்றும் தெரிவிப்பவையே. இதற்கு ஒரு பேராசிரியர் தேவையில்லை. நாடு சுற்றிவந்த எவரும் இத்தகைய செய்திகளைச் சொல்லலாம்.

இன்று கூட்டப்படும் தமிழாராய்ச்சி மாநாட்டின் சிறப்புகள் இரண்டு. அவற்றுள் ஒன்று மாநாட்டுச் சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் ஆங்கிலத்தில் ஆற்றப்படுதலும் படிக்கப்படுதலும். இன்னென்று, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினின்று வயவர் சி. பி. இராமசாமி அவர்களும் பேரா. தெ. பொ. மீ.யும், வங்க நாட்டினின்று பர். சட்டர்சியும், மாநாட்டிற்குச் செல்லுதல்.

பர். சட்டர்சியின் தமிழறிவுத்திறம் எத்தகையதென்பது, 'என் அண்ணாமலை நகர் வாழ்க்கை' என்னும் பாவாணர் கட்டுரைத் தொடரைப் படித்தவர் நன்கறிவர். அதனை இங்கு மீண்டும் கூறுதல் கூறியது கூறும் குற்றமாகும்.

மாநாட்டிற்குச் செலவிடப்படவிருக்கும் பணம் இலக்கக் கணக்கான வெண்பொற்காசென்று தெரியவருகின்றது. இதனாற் பெறப்படும் பயன் மலைகல்லி எலிபிடித்ததாகுமோ என அஞ்சவேண்டியிருக்கின்றது.

தமிழுக்கு ஆக்கம் செய்யும் பணித்துறைகள் எத்தனையோ பலவுள்ளன. தமிழகத்து நாட்டுப்புறத்திலும் பழஞ்சேர நாடான மலையாள நாட்டிலும் பழங்குட கொங்கான கன்னட நாட்டிலும், வழக்கிறந்துவருகின்ற பழந்தமிழ்ச் சொற்களையெல்லாம்தொகுப்பதற்கு ஒரு பல்கலைக் கழகமும் இதுவரை ஒரு முயற்சியும் செய்ததில்லை. வா, போ, தூக்கு என்பன போன்ற எளிய தமிழ்ச்சொற்கள் மேலையாப்பிரிக்கக் காலநாட்டு மொழியின் அடிப்படைச் சொற்களாக வழங்குகின்றனவென்று, ஐந்தாண்டிற்கு முன்னரே அந்நாட்டு அரசி

யல் தலைவர் கூறியுள்ளார். இதனை ஆராய்தற்குத் தக்க மொழியாராய்ச்சியாளர் ஒருவரை அனுப்பிவைக்க, தமிழ் நாட்டு அரசினர்க்குக் கருத்தே எழவில்லை. தமிழ் நாட்டுப் பண்டை வரலாறு தமிழ்ப்பகைவர் சிலரால் தலைகீழாக எழுதப்பட்டு வருகின்றது. இதைத் தடுத்து உண்மையான வரலாற்றை வரைவிக்க ஓர் அமைப்பகமும் இல்லை. தமிழன் பிறந்தகம் குமரிநாடாதலால், இந்துமாவாரியில் ஆழ்ந்த கடலாராய்ச்சி செய்வது இன்றியமையாததாகின்றது. தமிழுக்கு ஒரு வேர்ச்சொல் அகரமுதலியோ, சொற் பிறப்பியல் அகர முதலியோ, இன்னும் ஏற்படவில்லை. அவற்றைத் தொகுக்கும் ஆற்றலுள்ளவர்க்கோ இருந்த சிறு சம்பளப் பதவியும் இழப்பாகின்றது.

ஒருதுறையில் அறிஞர் யாரென்று அறிஞர்க்கே அறிய முடியும்.

"புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனும்—நலமிக்க
பூம்புன லூர பொதுமக்கட் காகாதே
பாம்பறியும் பாம்பின கால்."

என்பது பழமொழி (7).

மாநாட்டிற்குச் சிறப்பாக யார் யாரை அழைக்க வேண்டுமென்பதை அறியாதவர் சிறந்த அறிஞராக இருக்க முடியாது. மலேயா நாட்டுத் தலைமையமைச்சர் உயர்திரு. துங்கு அபுதுல் இரகிமான் பொன்னான பண்பு வாய்ந்த பெருமான். உலகெங்கும் இனவெறிப் பேயும் மொழிவெறிப் பேயும் தலைவிரித்தாடும் இக்காலத்தும், தமிழையும் தமிழரையும் அரவணைத்துப் போற்றும் அன்னாரை யாம் நெஞ்சாரப் புகழ்ந்து வாயார வாழ்த்துகின்றோம். இறைவன் அவர்க்கும் அவர் குடும்பத்திற்கும் நீடிய வாழ்வும் கூடிய நலமும் அருள்வாராக.

மாநாட்டின் விளைவை ஆய்ந்தோய்ந்து பார்க்கின், அது திரு. தனிநாயகத்தின் விளம்பரமாகவே முடியும் எனத் தோன்றுகின்றது. ஆதலால் மலேயாத் தமிழ் மக்கள் இது பற்றி மிக விழிப்பாயிருக்க வேண்டுகின்றோம். அமைதிப் பெருங்கடலில் வாரியிறைக்கப்படவிருக்கும் இலக்கக்கணக்கான வெள்ளிகள் பொதுமக்கள் உழைப்பின் வேர்வைத் துளிகள் என்பதையுணர்ந்து, தலைமையமைச்சர் அவர்களிடம் தமிழை வளர்க்கும் தக்க முறையைத் தெரிவித்து, வீண் முயற்சியை மாண் முயற்சியாக மாற்றுவாராக.

இக்காலத்தில் தமிழ்த்துறையிற் பலர் பதவியினாலேயே பெரியவராயிருக்கின்றனர்; படிப்பினால் அல்லர். மலேயா

(தொடர்ச்சி கசு-ஆம் பக்கம்)

அறியாமை வாழ்வு

துரை–மாணிக்கம்.

மன்பதையின் சிறப்பறியீர்; மனத்தொளிருஞ் சுடரறியீர்;
புன்புரைசொல் வினைமிகுந்தீர்; புறத்தறிவே உயர்வென்று
பன்வகையால் உடல்எழிலைப் பரவுகின்றீர், பாரகத்தீர்!
என்கொலும தறியாமை; இதுவாழ்வென் றியம்புவதே!

முன்பிருந்த பழம்பெருமை முழக்கிடுவீர்; முன்னிருப்பார்க்
கன்பிருந்த மொழிபுகலீர்; அயலார்க்கொன் றுதவுகிலீர்;
என்பிருந்த தோற்பாவைக் கெழில்போலும் இருந்தீரே,
என்கொலும தறியாமை, இதுவாழ்வென் றியம்புவதே!

தின்பொருளின் சுவைபேசித் தேய்பொருளின் புகழ்பாடி
மின்பொருந்தும் ஆற்றலெலாம் மேவியுளம் மேவாமே
வன்மமிகு கொடுஞ்செயலின் வாய்ப்பட்டீர்! வாய்மையிலீர்!
என்கொலும தறியாமை, இதுவாழ்வென் றியம்புவதே!

கன்மடையி னிடைநீராய்க் கலகலெனச் சலசலெனச்
சொன்மாரி பொழிவிப்பீர்! சுழிமனத்தீர்! தேங்குபுனல்
என்மான வுணர்வடங்கிச் செயலிழப்பீர், இருநிலத்தீர்!
என்கொலும தறியாமை இதுவாழ்வென் றியம்புவதே!

முன்பருவத் தலைந்தாடி இளமையிலே மொய்த்தடங்கண்
மின்பாய்விற் கிழுப்புண்டு மேனிநற வுண்டவளோ
டின்பாய்ந்த பெரும்பயனு லெண்ணரிய மகப்பெறுவீர்!
என்கொலும தறியாமை, இதுவாழ்வென் றியம்புவதே!

தன்மனைக்கும் தன்மகர்க்கும் தங்கியினைப் பாருமே,
பன்வகையாற் பொய்சாற்றிப் பன்னலமுஞ் செய்விப்பீர்
என்பயனிங் கெதிர்கொண்டீர்? இவண்பிறந்த ஏதறியீர்!
என்கொலும தறியாமை, இதுவாழ்வென் றியம்புவதே!

துன்னூசி நுனித்தனையும் ஓரறமுந் தோற்றுகிலீர்!
தின்றூசிப் போம்பொருட்குத் திசையெட்டுந் தேய்ந்தலிவீர்!
மன்னுமுளப் பெருஞ்சிறப்பை மறந்தீரே, மண்ணகத்தீர்!
என்கொலும தறியாமை, இதுவாழ்வென் றியம்புவதே!

பொன்னணியும் முத்தணியும் பூந்துகிலும் பூண்டுபல
மின்னிடையார் மருங்கணைந்து மிசைவதுவே இன்பமெனப்
பன்னியுரை சாற்றிடுவீர்! பழிவினைக்கிங் குயிர்செகுப்பீர்.
என்கொலும தறியாமை, இதுவாழ்வென் றியம்புவதே!

குற்றியலுகரம் உயிரீறே.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

மொழிப் பெரும் புலவர் : ஞா. தேவநேயப் பாவாணர், எம்.ஏ.,

ச. குற்றியலுகரம் அரை மாத்திரை பெறுமென்பதும், ஒருமாத்திரை உள்ள உகரமே இடமும் பற்றுக்கோடும் காரணமாக அரை மாத்திரையாகக் குறுகியொலிக்கும் என்பதும், அவ்வாறு அரைமாத்திரையாகக் குறுகியொலிப்பினும் அஃது உயிரீறே என்பதும், வருமொழி முதலில் உயிர் வரும் போது நிலைமொழி இறுதியில் உள்ள குற்றியலுகரம் மெய்யை விட்டு ஓடும் என்பதுமே நன்னூலார் கருத்துகளாகும்.''

இங்குக் கூறப்பட்டுள்ள நன்னூலார் கருத்துகளுள் குற்றியலுகரம் உயிர்முதல் வருமொழி முன் மெய்விட்டோடும் என்னும் ஒன்றே தவறுனதாகும்,

"குற்றிய லுகரமும் அற்றென மொழிப."

என்னும் தொல்காப்பிய நூற்பா (புணரியல்,ஈ)உரையில்,

''இம்மாட்டேறு ஒருபுடைச்சேறல் புள்ளிபெறுமையின் அங்ஙனம் உயிரேறுங்காற் குற்றுகரங்கெட்டுப்போக நின்ற ஒற்றின்மேல் உயிரேறிற்றென்று கொள்ளற்க. ''நாகரி''தென் புழி முன்னர்க்குற்றுகர வோசையும் பின்னர் உயிரோசையும் பெற்று அவ்விரண்டுங் கூடிநின்றல்லது அப்பொருளுணர்த்த லாகாமையின், இஃது உயிரோடுங் கூடிநிற்கு மென்றார்.'' என்று நச்சினார்க்கினியர் கூறியது. அந்நூற்பாவிற்குப் பொருந்தாதேனும், குற்றியலுகரம் கெடாது நின்றே உயிரொடு புணரும் என்னும் உண்மையை உணர்த்துவது கவனிக்கத்தக்கது.

ஊணில்லை என்னும் புணர்மொழியில் நிலைமொழியீற்று ணகரமெய் எங்ஙனம் கெடாது நிற்கின்றதோ, அங்ஙனமே

நன்னருடல் பேணுகிலீர்; நலிந்துழன்று நாறுகின்றீர்!
என்னவகை வாழ்ந்திடுவ தென்பதையு மெண்ணுகிலீர்!
மின்னொளிபோல் தோன்றுகிறீர்; மாளுகிறீர்; நீணிலத்தீர்!
என்கொலும தறியாமை, இதுவாழ் வென்றியம்புவதே!

பின்விளைவை எண்ணுகிலாப் பேதையரா யீங்கிருந்து
பன்விளைவுக் காளாகிப் பதைபதைத்துச் சிதைந்தொழிவீர்;
முன்பிழையே பின்துயரை மூட்டுவிக்கு மென்றறியீர்!
என்கொலும தறியாமை, இதுவாழ்வென் றியம்புவதே!

*

உறவில்லை, உலகில்லை என்பவற்றுள்ளும் முறையே முற்றுகரமும் குற்றுகரமும் கெடாதே நிற்கும். இதை ஒலித்துக் காணலாம். ஆயின் சற்று எஃகுச் செவிவேண்டும். உறவ், உலக் என்னும் சொல்லின்மையும், உறவு இல்லை, உலகு இல்லை என்னும் பொருளுண்மையும் அத் தொடரிடை உகரங் கெடாமைக்குச் சான்றாம்.

"குற்றிய லுகரமும் அற்றென மொழிப."

என்னும் நூற்பாவிற்கு, குற்றியலுகரமும் மெய்யெழுத்துப் போற் புள்ளியிட்டெழுதப்படும் என்பதே போந்தவுரையாம். நச்சினார்க்கினியரது, வேண்டாது கூறலும் வேறொன்று கூறலுமாகும். 'புள்ளியோடு நிலையல்' என்பதற்கு உயிரேற இடங் கொடுத்தல் என்று அவர் பொருள் கொண்டதே அதற்குக் காரணியமாகும்.

குற்றியலுகரத்தின் சாயுந்தன்மையும் குறுக்கமுமே ஏனை யுயிரேற இடந்தருமென வுணர்க.

டு. "தனிமொழி இறுதியில் அரைமாத்திரை பெறும் குற்றுகரம், தொடர்மொழி இடைப்படினும் அரைமாத்திரையே பெறும் என்பது நன்னூலார் கருத்து. ஆனால்,

அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா இறுதியும் உகரம் நிலையும்."

(தொல். குற்று. 8)

என்பது தொல்காப்பியம். "அல்வழியைச் சொல்லுமிடத்தும் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக் கண்ணும் ஆறு ஈற்றுக் குற்றிய லுகரமும் நிறைந்தே முற்றுகரமாகி நிற்கும்." என்று இளம்பூரணர் இந்நூற்பாவிற்கு உரை யெழுதியுள்ளார். பேராசிரியரும் செய்யுளியல் 43-ஆம் நூற்பாவுரையில் இளம் பூரணர் கருத்தையே சார்ந்துரைத்துள்ளார். மேற்கூறிய நூற்பாவில் உகரம் நிறையும்' என்பதற்கு வேறுக "உகரம் நிறையும்" என்பதற்கு வேறுக "உகரம் நிலையும்" என்று பாடங்கொண்டு வேறுபட்ட பொருள் கூறினும், இதற்கு அடுத்த நூற்பாவுரையில் (குற்றியலுகரப் புணரியல், 4) இளம் பூரணர் கொண்ட 'நிறையும்' என்ற பாடத்தையும், அவர் எழுதிய உரையினையும் எடுத்துக்காட்டி மறுக்காது போனமையும் இங்கு எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது. செவி கருவியாக உணர்ந்துபார்க்கும் பொழுது, நாடி என்பதன் இறுதியில் வரும் குற்றுகரவோசை நாகுகடிது என்பதனுள் வாராது. ஓசைமிக்கு ஒலிப்பது வெள்ளிடை மலையென விளங்கவும், நன்னூலார் முன்னூலாசிரியராகிய தொல்காப்பியரோடும், உரைகாரர்களோடும் தக்க காரணமின்றி மாறுபட்டுரைப்பது நமக்கு வியப்பாகவே உள்ளது."

சில செய்யுள்கட்கும் நூற்பாக்கட்குமுள்ள பாட வேறு பாடுளுட் சிறந்ததைக் கண்டுபிடிப்பதே ஒரு சிறந்த புலமைத் திறனுகின்றது. பாட வேறுபாட்டினல் ஏற்படும் பொருள் வேறுபாடு ஆசிரியர் கருத்திற்கு நேர்மாருகவும் நேர்ந்துவிடு கின்றது.

மன்னர்குடி நகராட்சிக் குடிதண்ணீர்க் குழா யொன்றின் மீது, 'குடிதண்ணீர்க்கு மட்டும்' என்று எழுதப்பட்டிருக்க வேண்டிய தொடர், எழுதினன் தவற்ருல் ககர வொற்றுவிடப் பட்டு, தகையாற்ற வந்தாரெல்லாம் தவருகப் பொருள் கொண்டு தண்ணீர் குடியாதுபோக நேர்ந்தது.

"அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா இறுதியும் உகரம் நிறையும்."

என்னும் நூற்பா ஈற்றிலுள்ள "நிறையும்" என்னும் பாடத்தி னும், "நிலையும்" என்னும் பாடமே சிறந்ததாகத் தெரி கின்றது. குற்றியலுகரம் மெய்யெழுத்துப்போல் அரையள பொலிக்குமென்றும் புள்ளிபெறுமென்றும் முன்னர்க் கூறப் பட்டதினல், புணர்ச்சியில் ஒரேவிடத்து மெய் கெடுதல் அல் லது திரிதல்போல் குற்றியலுகரமும் மெய்கெடுதலும் திரிதலு முண்டோ வென்னும் ஐயம் நீக்குதற்கே எல்லா இறுதியும் உகரம் நிலையும்" எனக் கூறவேண்டியதாயிற்று.

இளம்பூரணர் இன்று எழுதப்பெற்றுள்ள தொல்காப்பிய வுரை யாசிரியருள் முதல்வர். எத்துறையிலும் முதன் முதல் எழுதப்பெற்றது குறைபாடுள்ளதாகவே யிருக்கும். இளம் பூரணர் புலமை அவர் பெயருக்கேற்ப இளநிறைவு பெற்றதே யென்பது "கொடிநிலை கந்தழிவள்ளி" என்ற புறத்திணை நூற் பாவிற்கும் (33) "பாங்கன் நிமித்தம் பன்னிரண்டென்ப" என் னும் களவியல் நூற்பாவிற்கும் (13), அவர் கூறியவுரையான் அறியப்படும். இளமையிலேயே நிறைவு பெற்றவர் என்பது அவர்க்கு ஏற்காது.

பேராசிரியரும் "உகரம் நிறையும்" என்று பாடங்கொள் ளத் தேவையில்லை. சிறுவர் சிலவகையிற் கணக்கிற் சேர்க் கப்பெற்றும் சிலவகையிற் சேர்க்கப்பெருதும் போவதுபோல், குற்றியலுகரமும் சீர்நிலைக்கும் தளைவகைக்கும் எழுத்தெண் ணப் பெற்றும், ஐவகையடிகளின் பதினேழ் நிலைவகைக்கு எழுத்தெண்ணப் பெருதும், தொன்றுதொட்டு இயங்கி வந்திருக்கின்றது. தளைவகைக்கு எழுத்தெண்ணப் பெருக் கால்,

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு."

என்னும் குறளும் (786) சீர்நிலைக்கு எழுத்தெண்ணுப் பெருக்கால் "முந்நீ ருண்டு முந்நீர்ப் பாயும்"

என்னும் புறப்பாட்டடியும் (24 : 16) வழுவாம்.

இனி, "உகரம் நிறையும்" என்னும் பாடத்தையே கொள்ளினும், குற்றுகரம் முற்றுகர மாகிவிடும் என்று பொருள் கொள்ளற்கிடமில்லை.

"இடைப்படிற் குறுகும் இடனுமா ருண்டே
கடப்பா டறிந்த புணரிய லான."

என்று (மொழிமரபு, 4) முன்னர்ப் பொதுப்படக் கூறியதனால், புணர்மொழியகத்துக் குற்றியலுகரமெல்லாம் அரையளபினுங் குறுகிக் காலாயொலிக்குமோ வெனும் ஐயத்தை அகற்றுதற்கே, "உகரம் நிறையும்" எனக் கூறவேண்டியதாயிற்றெனக் கொள்க.

குற்றிய லுகரப்புணரியல் 4—ஆம் நூற்பாவுரையில், "முன்னின்ற சூத்திரத்து உகர நிறையுமென்று பாட மோதி, அதற்கு உகரம் அரை மாத்திரையிற் சிறிது மிக்கு நிற்கு மென்று பொருள்கூறி, இச்சூத்திரத்திற்குப் பழைய அரை மாத்திரை பெற்றுநிற்குமென்று, கூறுவாரும் உளர்." என்று நச்சினர்க்கினியர் கூறி அம்மட்டோடு விட்டொழிந்தது, இளம்பூரணருரையை மறுக்கவியலாமை பற்றியன்று மறுக்க வேண்டாமை பற்றியே யென்க.

நாகு என்னும் தனிச்சொல்லின் இறுதியில்வரும் குற்றுகரமே, நாகு கடிது என்னும் தொடர்ச்சொல்லின் இடையும் நேர்கின்றது. அது ஒலியளவில் ஒருகாற் குன்றினும் குன்றுமே யொழியக் கூடுவதிலை. இதுவே தமிழரின் இயல்பான ஒலிப்பாம். இதற்கு மாறுக நீட்டியொலிப்பது வேண்டுமென்று செய்வதாகவோ வேற்று மொழியாரின் தொடர்பால் நேர்ந்ததாகவோ தான் இருத்தல் வேண்டும். அல்லாக்கால் செவிப்புலக் கோளாற்றின் விளைவாயிருக்கலாம்.

தொடர்ச் சொல்லிடைக் குற்றியலுகரம் ஒலிமிக் கொலிப்பது வெள்ளிடை மலையென விளங்குவதாகப் புலவர் முதுகுன்றனர் கூறியிருப்பது நமக்கு வியப்பாகவேயிருக்கின்றது.

வெள்ளிடை மலையென்னும் தொடரை, பன்மொழித் தொடர் வகைகளுள் ஒன்றான அடையடுத்த பெயர்ச் சொற்றொடராகக் கொள்ளாது, அடையடுத்த எழுவாய்த் தொடராகக் கொண்டு ஒன்றுமில்லாத வெள்ளிடையே மலைபோல் உருக்கொண்டு தோன்றுவதாகப் பொருள் கொள்வதே இவ்விடத்திற்குப் பொருத்தமாம்.

கூ. குற்றியலுகரம் என்பதற்குக் குறிதாகிய இயல்பினையுடைய உகரம் என்பது பொருள். எவ்வாறு அகரம் தன்னியல்பில் நிற்பினும், தன்னைக் காட்டிலும் நெடிய ஓசையை உடைய ஆகாரத்தை நோக்கக் குறுகிய ஓசையுடைமையால் குற்றெழுத்து எனப்பட்டதோ, அவ்வாறே அரைமாத்திரை அளவுள்ள, விகாரப்படாத இயல்பான குற்றியலுகரமும் தன்னின் நெடிதாகிய ஒரு மாத்திரையுள்ள முற்றுகரத்தை நோக்கக் குறுகிய ஓசையுடைமையால் குற்றியலுகரம் எனப்பட்டதே தவிர, முற்றுகரம் இடமும் பற்றுக்கோடும் காரணமாகக் குறுகி ஒலித்ததால் அன்று.''

இதில் தன்முரணும் விடாப்பிடியுறழும் (விதண்டாவாதமும்) திரிபுணர்ச்சியும் விளங்கித் தோன்றுகின்றன. ஆகாரத்தை நோக்க அகரம் குறுகிக் குறிலெனப்பட்டாற் போன்று முற்றுகரத்தை நோக்கக் குற்றுகரம் குறுகிக் குற்றியலுகரம் எனப்பட்டதென்று கூறியவரே, இயல்பானதும் திரிபுறுததும் இடமும்பற்றுக் கோடும் அற்றதுமான ஓர் அரையளபுகரம் அந்தரத்தில் தனியாக நிற்பதாக ஒரு மயக்கக் காட்சி காண்கிறார். இடமும் பற்றுக் கோடுமற்று முற்றுகரம்போல் இயல்பான உகரம் எந்த நெடுங்கணக்கில் உள்ளது? குற்றியலிகரம் எங்ஙனம் முற்றியலிகரத்தின் திரிபோ, அங்ஙனமே குற்றியலுகரமும் முற்றியலுகரத்தின் திரிபாகவன்றே உளது! சொல்லிறுதியாகிய இடமும் வல்லின மெய்யாகிய பற்றுக்கோடுமில்லாத குற்றியலுகரம் எத்தமிழில் எந்நூலில் வழங்குகின்றது? அதை யாருக்கேனும் புலவர் முதுகுன்றனார் காட்டவொண்ணுமோ.முற்றும்வழுவான ஒரு கருத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு, அதற்கேற்ப நூற்பாக்கட்கெல்லாம் உரைதிரித்துக் கூறுவது ஒல்வதொன்றே? ஒருவர் தெளிந்த நிலையில் தம் தவற்றை உணரலாம். மயக்க நிலையில் எவ்வாறு உணர்தல் கூடும்? அந்நிலையில் அவர் கூறுவதெல்லாம் பொருளுள்ளதாகுமோ? ஏரண முறைப்படி சான்றுகாட்டித்தம் கொள்கையை நிறுவாது, தம்மொடு மாறுபடுவாரை நோக்கி, ''இடமும் பற்றுக் கோடும் காரணமாகவே ஒரு மாத்திரை அளவுள்ள முற்றுகரம் குறுகி விகாரப்பட்டு அரைமாத்திரையாயிற்று என்று சாதிப்பார் பலருளர்'' என்றுகூறி என் பயன்?

எ. "அவர் கூறும் காரணம் உண்மையாயின், இரண்டு மாத்திரையளவுள்ள ஐகாரமும் ஔகாரமும், மொழியகத்து வேறு எழுத்துகளின் சார்பால் ஒன்றரை மாத்திரையாகவும் ஒரு மாத்திரையாகவும் குறுகி யொலிக்கும் பொழுது ஐகாரக் குறுக்கம் எனவும் ஔகாரக் குறுக்கம் எனவும், அரைமாத் திரை அளவுள்ள மகரம் மொழியகத்து வேறு எழுத்துகளின் சார்பால் கால் மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும்போது மகரக் குறுக்கம் எனவும் பெயர் தந்த தொல்லாசிரியர் இச் சார்பெழுத்துக்கும் உகரக் குறுக்கம் என்றன்றே பெயர் தந் திருக்க வேண்டும். அவ்வாறு அவர்பெயர் கூறக் காணேமே!"

உயிரெழுத்துகள் பன்னிரண்டனுள், ஐ ஔ என்னும் இரண்டும் பிந்தி ஏற்பட்ட புணரொலிகள் (Diphthongs) அதனாலேயே, அவை தனியொலிகளான பிற நெடில்கள்போல் காரச் சாரியை பெறாது கான் சாரியை சிறப்பாகப் பெற்றன. அவற்றிற்குக் காரச்சாரியையும் கொடுப்பது பிற்கால வழக்கு. குறிலுக்குக்கரமும் நெடிலுக்குக் காரமும் கொடுக்க வேண்டி யதே நெறியாயினும், குறிலுக்கும் காரச்சாரியை கொடுப்பர் பிற்காலத்தார். இது வடமொழியைப் பின்பற்றிய தவறான வழக்காகும். குற்றியலுகரமும் குற்றியலிகரமும் முந்தியே தோன்றியவை யாதலாலும், ஒழுங்குபட்டவையாதலாலும், குறுகி இயல்கின்ற உகரம் என்றும் குறுகிஇயல்கின்ற இகர மென்றும், பெயர் பெற்றன. இனி, குறுகிய இயல்புள்ள இகர உகரம் என்றுமாம்.

"அகர இகரம் ஐகாரம் ஆகும்." (மொழி: உக)
"அகர உகரம் ஔகாரம் ஆகும்." (ஷி உஉ)

என்று கூறிய தொல்காப்பியரே,

"அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"
(ஷி ஒ ங)

என்றும்,

"அகரத் திம்பர் வகரப் புள்ளியும்
ஔவென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"

என்றும்

"ஓரள பாகும் இடனுமா ருண்டே
தேருங் காலை மொழிவயி னான." (ஷி உச)

என்றும், கூறியுள்ளார்.

ஐகாரம் அய் என்றும் ஔகாரம் அவ் என்றும் ஒலிக்கும் போதே, ஒன்றரையளபினவாக் குறுகி விடுகின்றன. இனி, இடையன், சடையன் போன்ற சொற்களின் இடையில்,

டகர ஐகான் டகரம் போல் ஒலித்து ஓரளபினதாகவும் குறுகி விடுகின்றது.

ஐகார ஒளகாரக் குறுக்கங்களைக் கூறும் பொழுதும்,

"அரையளபு குறுகல் மகரம் உடைத்தே
இசையிடன் அருகும் தெரியும் காலே." (நூன் கஉ)

என்று மகரக் குறுக்கத்தைக் கூறும் பொழுதும் அளபு குறுகுமென்றே கூறிச் செல்கின்ருர் தொல்காப்பியர். இவற் றிற் கெல்லாம் குறுக்கமென்று பெயர் கொடுத்துச் சார் பெழுத்துய்த்தாகக் காட்டியவர் நன்னூலாரே.

போலும், மருளும் என்னும் சொற்கள் போன்ம் மருண்ம் எனச் சிதைந்த நிலையிலேயே, அவற்றின் ஈற்றுமகரமெய் குறுகியொலிக்கின்றது. வரும்வண்ணக்கன் என்னும் தொட ரையும் பிரித்து, வரும் என்னும் நிலைமொழியை முந்திய அடி யிறுதியிலும் வண்ணக்கன் என்னும் சொல்லைப் பிந்திய அடி முதலிலும் நிறுத்திவிடின் மகரக் குறுக்கத்திற்கு இடமில்லை. இங்ஙனமே ஐகாரம் வரும் சொல்லையும் அசை பிரித்து வெவ் வேறு சீரிலும் அடியிலும் நிறுத்திவிடின், ஓரளபாகக் குறு காது. குற்றிய லுகர குற்றியலிகரங்களையோ இங்ஙனம் பிரித்து நிறுத்த முடியாது. ஆகவே, இகர வுகரம் முந்தித் தோன்றியவை என்பது மட்டுமன்றி, குற்றிய லிகர குற்றிய லுகரங்கள் ஒழுங்குபட்டவையாயுமிருக்கின்றன.

மேலும், குற்றிய லுகர குற்றிய லிகரங்கள் முந்தி அறியப் பட்டதினல் அப்பெயர் பெற்றனவென்றும், பிந்தியறியப் பட்டவை யெல்லாம் குறுக்கமென வேறுவகையிற் பெயர் பெற்றன என்றும் கொள்வதில் யாதொரு இழுக்குமில்லை யென்றும், பெயர் வேறுபாட்டைக் குற்றியலுகரம் திரிபெழுத் தன்றெனக் கூறுவதற்குச் சான்ருகக் கொள்வது பொறுந்தா தென்றும், கூறிவிடுக்க. (தொடரும்)

அ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற அயல்நாட்டுத் தலைவர்க்கு அது தெரியாது. ஏராள மாய்ப் பணம் செலவிட்டால் எந்நாட்டிலும் உலகத் தமிழ் மாநாடு கூட்டலாம். அதனல், அதைக் கூட்டுபவர் பெயர் பெறலாம். ஆனல், தமிழுக்கு ஒரு நன்மையும் ஏற்படாது. கூட்டமும் கொண்டாட்டமும் சிறப்பாக நடைபெறுவதனலேயே தமிழ் சிறப்படைந்துவிட்டதெனக் கருதுதல் தவருகும். இக்காலத்தில் உண்மைத் தமிழறிஞர்க்குத் தமிழ் நாட்டிலும் இடமில்லை. தமிழைக் காட்டிக் கொடுப்பவரே தலைமைப் பதவி தாங்கித் தழைத்து வாழ்கின்றனர்.

—ஞா. தே.

நிலத்திணையியல்.

காந்தள்.

எழிற்செல்வன்.

தோற்றுவாய்: காந்தள் தமிழ்நாட்டிற்கு நெடுங்காலமாகப் பழக்கப்பட்ட மலர்ப்பயிர். பழந்தமிழ் இலக்கியங்களில் காந்தள் பற்றிய குறிப்புகள் பல காணப்படுகின்றன. காந்தள் இயற்கையில் வளர்ந்து எழில் கூட்டிய நிலையையும், தலைவர் தலைவியரிடையே காதல் அடையாளமாக விளங்கியதையும் நூல்கள் வாயிலாய் அறிகின்றோம். குறவர் வாழும் குடில்களின் அருகிலும், குறிஞ்சி நிலச் சாரலிலும் வளர்ந்த காந்தள் மக்களின் வாழ்வோடும் உணர்வோடும் இணைந்து சிறந்துள்ளது. 'கார் தோற்றும் காந்தள்' பரிபாடல் 18 : 34, 35) 'தோன்றி தீயென மலரா' (பரிபாடல் 11 : 21) 'எரி மருள் தோன்றி' அகம் 218) குருதிப்பூவின் குலைக்காந்தட்டே' (குறுந்தொகை 1) 'காந்தள் கமழ்குலை அவிழ்ந்த சாரல்' (நற்றிணை 313) 'காந்தள் வேலி ஓங்கு மலை' (குறுந்தொகை 76) 'காந்தள் வேலிச் சிறுகுடி' (குறுந்தொகை 100) 'செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும்' (சிறுபாணாற்றுப்படை 167) 'நெடுவரை மிசைஇய காந்தள் மென் விரல்' (பொருநராற்றுப்படை) 'சிலம்புகமழ் காந்தள் நறுங்குலை' (ஐங்குறுநூறு 293) எனப் பல நிலைகளில் காந்தள் மலர் சுட்டப்படுகின்றது. நங்கையரின் அழகிய மென் விரல்கள் செம்மை வண்ணத்தில் நீண்ட வடிவில் விளங்கிய காந்தள் இதழ்களோடு புலவர்களால் ஒப்பிடப்பட்டுள்ளன. கழக இலக்கியங்களில் காந்தள் பற்றிய குறிப்புகள் நாற்பத்து நான்கு இடங்களில் காணக் கிடக்கின்றன.

பழந்தமிழ் இலக்கியத்தில் காந்தள் கருப்பொருளில் ஒன்றாக விளங்கி வந்துள்ளமை காந்தளுடன் தமிழர் பூண்ட தொடர்பினையும் பழந்தமிழரின் இயற்கையோடியைந்த வாழ்வினையும் குன்றின மீதிட்ட ஒளிப்பிழம்பாகக் காட்டுகின்றது. தலைவி தலைவனை மட்டுமல்லாமல், அவன் வாழும் மலையையும், ஊரையும் கூடக் காதலித்தாள். முதல் நாள் இரவு தலைவனின் மலையில் பெருமழை பொழிந்தது. மறுநாள் காலையில் மலையினின்று பெருவெள்ளம் எழுந்தது. வேரோடு சாய்ந்த காந்தள் செடியை வெள்ளம் மலரோடு தாங்கி வந்தது. வெள்ளத்தில் மிதந்து வந்த அந்தக்காந்தள் செடியைத் தன் தளிர்க்கையில் தாங்கினாள். தலைவன்பால் இனிய எண்ணம் இளம் நெஞ்சகத்தில் இழைந்தோட அச்செடியை மார்போடணைத்து வாடினாள். அவ்வணைப்பில் முகிழ்த்த வெப்பத்தால் செடி வாடியது. இலையும், மலரும் வாடி உதிர்ந்தாலும் அதன் கிழங்கெடுத்து முற்றத்தில் நட்டு வளர்க்கத் தலைவி மனம் நாடியது. அவ்வாறே நட்டு

அன்புடன் பேணி வளர்த்தாள். காந்தல் செம்மையாக வளர்ந்து செம்மலர் பூத்தது கண்டு மகிழ்ந்தாள். முற்றத்தில் எழில் பெருக்கிய காந்தள் செல்வம், அக்காதலறச் செல்வத்திற்கு ஆறுதல் தரும் அருமருந்தானது.

பயிரியல் பாகுபாடும் சூழலும் : காந்தள், பயிரியலில் 'குளொரியோசா சுபர்பா' (gloriosa superba) என அழைக்கப்படுகின்றது. 'சுபர்பா' தனிகத்திலும் (Species) 'குளோரியோசா' பண்புக்குழுவிலும் (Genus) இடம்பெறும். காந்தள் 'இலில்லியேசியே' (Liliaceae) குடும்பத்தைச் சார்ந்தது. காந்தள் கலப்பைக்கிழங்கு எனவும் அழைக்கப்மடுகின்றது. ஆங்கிலத்தில் 'குளோரிலில்லி' (Glory lily) என அழைக்கின்றனர்.

சூழலைப் (Habitat) பொறுத்த அளவில் உலகின் வெப்பப் பகுதிகளில் (Tropigal regions) காந்தள் இயற்கையில் காணப்படுகின்றது. ஆப்பிரிக்க நாட்டு வெப்பக் காடுகளிலும், மலாயா சீனம், தென்னூடு, 'உத்திரப்பிரதேசம், வங்காளம், அந்தமான் ஆகியவிடங்களிலும் காந்தள் இயல்பாய் வளர்கின்றது. தென்னகத்தில் மலைப்பகுதிகளில் கடல் மட்டத்தினின்று 7000 அடி உயரம் வரை உள்ள பகுதிகளில் காந்தள் வளரும். தென்னூட்டில் கரம்பு நிலங்களிலும், கள்ளிகள் முளைத்த வேலிகளிலும், முட்புதருக்கிடையிலும் காந்தள் வளர்ந்து கிடப்பதைக்காணலாம். இவ்விடங்களில் மழைக் காலங்களில் காந்தள் வளர்ந்து வண்ண மலர்களோடு விளங்குவது கண்கூடு. காந்தள் பயிருக்கு மிகுந்த கதிரொளி தேவை. எனவே தோட்டங்களில் நிழல் படாமல் ஒளிமிகுந்த இடங்களை இம்மலர்ப் பயிருக்கு ஒதுக்குதல் வேண்டும்.

பயிர் விளக்கம்:- காந்தள் பெரும் பூண்டாகப் (Herbaceous) படரும் பயிர். இலைகள் நீண்டு, ஒடுங்கி 15 முதல் 20 கீழ்நூறுகோல் (Centimetere) அளவில், முனை சுருண்டு. பிடிகாம்பாக (tendril) முடிகின்றது. காந்தள் மேலெழுந்து படருவதற்கு இப் பிடிகாம்புகள் துணைபுரிகின்றன. காந்தள் மேலேறிப் படரும் பயிராயினும் அளவாகவே வளரும். அதாவது 20 அடி உயரத்திற்கு மேல்வளராது. ஓராண்டு வரை வாழ்ந்து, பூத்துக் காய்த்துக்கனிகள் தோன்றிய நிலையில் பூண்டின் தண்டு இறக்கின்றது.

காந்தள் மலர் குறுக்காக 8 முதல் 10 கீழ்நூறுகோல் (Centimeters) அளவில் பெரியதாக எழிலுடன் விளங்கும். மலர்கள் கணுக்களில் தோன்றித் தனித்து விளங்குகின்றன. மலர் ஒரு கிழமை வரை வாடாமல் வண்ணப் பொலிவோடு எழிலூட்ட வல்லது. பூவிதழ் (Petals), புறவிதழ் (Sepals) ஆகி

யவை 6.3 கீழ்நூறுகோல் (Centimeters) நீளமும், 8 முதல் 13 கீழ் ஆயிரக்கோல் (Millimeters) அகலமும் கொண்டு அலை போல் வளைந்து நெளிந்த விளிம்புடன் (Wavy margins) விளங்குகின்றன மலர்கள் முதலில் நிமிர்ந்து பசும் வண்ணத்தில் காட்சி தருகின்றன. பிறகு மலர்ந்த நிலையில் அடிப்புறத்தில் இளம் மஞ்சள் வண்ணமாகவும் இதழ்களின் (பூவிதழ் புற விதழ் முனைப்பகுதிகளில் சிவப்பு வண்ணமாகவும் மாறி, மஞ்சள் வண்ண விளிம்புகளுடன் (Margins) அழகுடன் பல வண்ணக்கலவையாகத் தோற்றம் காட்டுகின்றன. இறுதியில் இவ்விதழ்கள் மேலும் வண்ண வேறுபாடுகள் கொண்டு ஆழ்ந்த சிவப்பு நிறத்தில் (Scarlet) குருதியென, குருதிப்பூவாகத் திகழ்கின்றன. சுருண்டு மடங்கிய பூவிதழும் புறவிதழும் புலியின் நகத்தை நிகர்க்கின்றன.

காந்தளின் வேர்ப்பகுதிக்கிழங்கு (Rhizome - நிலத்தண்டு) கதுப்பாகவும் (Fleshy), வளைந்தும் (Arched), திரண்டும் (solid), வெண்ணிறத்தில் தனித்து (Simple), அல்லது கிளைத்து (Forked) சப்பையாக அல்லது உருண்டு 15 முதல் 20 கீழ்நூறுகோல் அளவில் உள்ளது. இந்நிலத்தண்டு (Rhizome) பயிர் பரவுதலுக்கு (Plant propagation) உதவும். இவ்வழியில் காந்தளை வளர்ப்பது எளிதாகும். உண்பதற்கு இக்கிழங்கு நஞ்சாகும்.

வளர்ப்பு:- காந்தள் பரம்பு நிலங்கள் முதற்கொண்டு மலைப்குதிகள் ஈருகப் பல்வேறு சூழ்நிலைகளில் வளர வல்லது மண் வடிகால் வாய்ப்புள்ள மண்ணுக அமைவது நலம். இல்லங்களில் தொட்டிகளிலும், இல்லத்தின் வாயிலிலும், தோட்டங்களிலும் காந்தளை வளர்த்து அழகு கூட்டுவது எளிதாகும். மண்ணில் வடிகால் வாகாக அமைவதோடு, வளமுள்ளதாகவும் இருத்தல் வேண்டும். தொட்டிக்கலவைகள் (Pot mixture) வளமுள்ளனவாக இருத்தல் முறை. நடவுக்குரிய இடத்தில் கதிரொளி இருத்தல் வேண்டும்.

காந்தள் பயிரை விதை வழியிலும் பரப்ப இயலும். நிலத்தண்டின் வாயிலாகப் பரப்புதலே சிறப்பு. நிலத்தண்டு வெட்டியெடுக்கப்பட்டு மழை காலத்திற்கு முன்பு உரிய இடத்தில் அல்லது தொட்டியில் நடப்படல் வேண்டும். குப்பை (Compost) அல்லது தொழு எருக் கலந்து மண்ணின் வளத்தினைப் பெருக்கவேண்டும். நட்ட பயிருக்கு முறையாக நீர் ஊற்றிக் காத்தல் வேண்டும். தண்டின் குவிந்த (Convex) மேல் பகுதியினின்று முளை தோன்றி வளர்கின்றது. கொடியாக மேலெழுந்து படரும் காந்தள் பயிரைத் தேவையான அமைப்பில் (Training) படரச் செய்ய வேண்டும்.

சிறப்பும் பயனும்:- காந்தள் எளிதாக வளர்ந்து எழில் பொலியும் மலர்ப்பயிர். ஆகையால் பூங்காக்கள், தோட்டங்கள் இல்லத்து முன்புறங்கள், இல்லத்துப் பூங்காக்கள், பணிமனைகளின் வெற்றிடங்கள் ஆகியவற்றில் இதனை வளர்த்து அழகு கூட்டலாம். பொதுவாக விரைவில் வாடி உதிரும் பிறமலர்கள் போலன்றி, வாடாமல், உதிராமல் மலரோடு பலநாள் இருப்பது காந்தளுக்குரிய சிறப்பாகும். மலர் பல வண்ணங்களில் தோற்றம் தருவது மலர்ப்பயிர்களுக்குத் தேவைப்படும் பண்பாகும். எனவே காந்தள் மலரியலாரைக் (Floriculturist) கவரும் என்பது உறுதி. மலர்கள், மஞ்சள், சிவப்பு, ஆழ்செம்மை ஆகிய வண்ணங்களில் அழகுத் தோற்றமளிப்பதால் காந்தள் மலரைப் பறி மலராகவும் (Cut flowers) பயன்படுத்தலாம். மலரைத் தண்டாகவும் சில இலைகளோடும் வெட்டியெடுத்து மலர்ச்செப்புகளில் (Flower vase) வைத்து நிலை மேடைகளையும் (Tables) இல்லத்துக் கூடங்களையும் (Drawing rooms) அழகு படுத்தலாம். பலகணி அருகில் வளர்த்துப் பலகணியில் காந்தள் செடியைப் படர விடுவதால் அழகு பொலியும். தென்னகத்தில் நெடுங்காலந்தொட்டுச் சிறப்புப் பெற்ற காந்தளை வணிக மலர்ப்பயிராகவும் கொணர்ந்து பரப்புதல் வேண்டும். வேளாண்மைத் துறை சார்ந்த மலர்இயல்துறை வாயிலாகவும், பிற தனிப்பயிரீட்டாளர் வாயிலாகவும் காந்தள் விதைகளையும், கிழங்குகளையும் விற்பனைக்குக் கொணரவேண்டும். காந்தளின் கிழங்கு மருத்துவத்துறையில் பயன் படும் மருந்துப்பொருளாகும். ஈழ நாட்டில் சுளுக்கிற்கும் (Sprain), பாரசீக நாட்டில் குருதி வெளியேற்றத்திற்கும் மருந்தாக இக்கிழங்குகள் பயன்படுகின்றன வேளாண்மை ஆய்வாளர்கள், சிறப்பாகக் கால்வழி இயலார் (Gentists) பண்பகக் கலப்புப் பணிக்கும் (Hybridization) பிற பெருக்கத்திற்கும் பயிர்களைப் பெரும் பண்புப்பயிர்களாக (Poliyploidy) உருவாக்குகின்றனர். இப்பெரும் பண்புப்பயிர்கள், நிறத்திரிப் (Chromosome) பெருக்கத்தாலும், இதில் உள்ள பண்பகங்களின் (Genes) பெருக்கத்தாலும் உருவாகின்றன. இப்பணிக்குக் கொலுச்சினம் (Co chicine) வெராத்தினக் கந்தகை (Veratrine sulphate) போன்ற இயைபுப் பொருட்கள் பயன்படுகின்றன. இவற்றைப் போலவே காந்தளின்று எடுக்கப்படும் 'காந்தளியம்' (Gloriososine, என்னும் இயைபுப் பொருளும் இப்பணிக்கு உதவும்.

உறுப்பினர்களுக்கு: நீங்கள் எக்காரணம்பற்றி அலுவலகத்திற்கு மடல் எழுதுவதானாலும், உங்கள் உறுப்பினர் எண்களைக் கட்டாயம் தெரிவிக்கவும்.

—அமைச்சர்.



கல்லூரித் தமிழிலக்கணத் தெளிவு.

ஆக்கியோர் : புலவர் சு. கு. அருணாசலனார்,
எம். ஏ., பி. ஓ. எல்.
அம்மாப்பேட்டை, சேலம்-3.

விலை உருபா : 3-75.

கிடைக்குமிடம் : ஆக்கியோர், கல்லூரிக் கூட்டுறவுப் பண்டசாலைகள்.

கல்லூரி மாணவர்க்கென எழுதப்பெற்ற இத்தமிழிலக்கண நூல் ஐந்திலக்கணங்களும் உள்ளடங்கிய விரிவான நூல். கல்லூரி மாணவர்க்கு மட்டுமல்லாமல் தமிழிலக்கணம் பயில விரும்பும் மற்றோர்க்கும் துணைபுரியும் வகையில் விளக்கமாகவும் தெளிவாகவும் இந்நூல் அமைந்துள்ளது தனித்தமிழில் எழுதப்பெற்றுள்ளது இதன் சிறப்பாகும். இடைக்கால இலக்கண நூலாருள் பெரும்பாலோர் தமிழிலக்கணத்தினைத் தமிழ்மரபுக் கொத்தபடி ஆயாமல் வடமொழி இலக்கணச் சார்பில் நின்று, தமிழிலக்கணம் வடமொழி இலக்கணத்திற்குப் பெரிதும் கடன் பட்டது என்னும் (உண்மையில்லாத) கருத்துப்பட எழுதிச் சென்றுராக, இக்காலத் தமிழாசிரியன்மாரும் அதனையே பின்பற்றி மாணவர்க்கு இலக்கண நூல் எழுதுவாராயினர் ஆனால் இவ்வாசிரியர் தமிழடிப்படையில், தமிழிலக்கணம் வடமொழி இலக்கணத்தோடு ஒவ்வாமை காட்டித் தமிழின் உண்மைத்திறம் விளங்க இந் நூலை யாத்திருப்பது பாராட்டிற்குரியது. ஆயினும் வழக்கத்தினை ஒட்டி வடமொழிப் புணர்ச்சியும் வடமொழிச் சொற்களின் பிழை-திருத்தமும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. வடமொழித் தொடர்பொழிந்த தனித்தமிழ் மரபினையும் வழக்குகளையுமே வருங்கால மாணவர்க் கறிவுறுத்த வேண்டுவதால் தமிழிலக்கணத்தில் வடமொழித் தொடர்பான செய்திகட்கு இனியும் இடம் ஒதுக்கத் தேவையில்லையே !

மரபொட்டிய ஐந்திலக்கணங்கள் மட்டுமன்றி இக்கால மாணவர்க்குத் தேவையான இலக்கணத் தொடர்பமைந்த வேறு பல செய்திகளும் இந்நூலில் உள. ஆங்கிலத்தொடர்பால் நேர்ந்த வழுவழக்குகள், சொற்றொடர்ப்பிழை-திருத்தம், இலக்கிய, செய்தித்தாள் தமிழ் வேறுபாடுகள் சொற்றொடரில் வரும் குறி விளக்கங்கள் ஆகியவை குறிப்பிடத் தக்கன. இறைச்சி உள்ளுறை உவமம் இரண்டிற்கும் உள்ள நுண்ணிய வேறுபாடு நன்கு விளக்கப் பெற்றுள்ளது.

இலக்கணம், இலக்கியம், பக்கம் ஆகிய சொற்களை வட சொற்களாக ஆசிரியர் கொண்டிருப்பது தமிழடிப்படைக்கும் உண்மைக்கும் முற்றிலும் பொருந்தாது. தொடக்கத்தில் (பக். 26, 27) உள்ள பிழை திருத்தப் பயிற்சி மிகவும் தாழ்ந்த தர முடையதாய் உள்ளது. எளிதில் பிரித்தறியப் பெருத நுண்ணிய பிழைகளையும், இயல்பாக நேரும் பிழைகளையும் திருத்தும் பயிற்சியே மாணவர்தம் மொழித் திறனை வளர்க்கும். பள்ளி மாணவரும் செய்யாத " ஞங்கள், மூன்ரு, சோழந், என்பன போன்ற வலிந்தமைத்த பிழைகளையும், ஆரு, காழைமாடு, தமிள் போன்ற வெளிப்படையான பிழைகளையும் திருத்துதற் காகக் கொடுத்திருப்பது கல்லூரி மாணவர்க்கு எவ்வகையிலும் பயன் தராது. தமிழில் சொற்ரொடரில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவை இடம் மாறின் பொருள் கெடாது என்றும் ஆங்கிலத்தில் அவ்வாறு மாறின் கெடும் என்றும் ஆசிரியர் குறித்துள்ளார். இது சரியன்று. ஆங்கிலத்தில் வேற்றுமை உருபு தோன்ருச் சொற்ரொடர்களிடையே அவ்வாறு கெடும். மற்றவற்றில் கெடாது. தமிழிலும் வேற்றுமை உருபு தோன்ருச்சொற்ரொடரில் எழுவாய் பயனிலை செயப்படுபொருள் இடம் மாறின் பொருள் கெடும். மற்றும், நேர்கூற்று, நேரல் கூற்று என்ற பிரிவும் ஆங்கிலத்தொடர்பால் அமைந்ததே தமிழுக்கு இன்றியமையாததன்று இலக்கணியர் என்ற சொல் இந்நூலின் அணிந்துரையிலும் பக். XIII) நூலுள் 24 ஆம் பக்கத்திலும் வருகின்றது. இலக்கண ஆசிரியரைக் குறிக்கும் இச்சொல் இலக்கணர் என வருமேயன்றி இலக்கணியர் என்று எவ்வாறு வரும்?

இவ்வாறு ஒருசில குறைகளிருப்பினும் இந்நூல் தமிழ் மாணவர்கட்குக் கைவிளக்காய்த் தனித்தமிழ் இலக்கண மரபினை நிலைநாட்டுவதாய் அமைந்துள்ளது மறுபதிப்பில் பிழை நீங்கி இந்நூல் வெளிவரும் என நம்புகிறேம்.

'கல்லாடன்'

சமாளிக்க முடியாத எதிரி!

" ஐம்புலன் நுகர்வினைப் பற்றிக் கவலைப்படாதவனும், உடல் நலம், புகழ், மதிப்பு இவற்றைப் புறக்கணிப்பவனும், ஆனல் தனக்குச் சரி என்று பட்டதை என்ன நேரினும் செய்து முடிக்க உறுதி பூண்டிருப்பவனுமான ஒரு மாந்தனைப்பற்றி மிகவும் விழிப்பாக நடந்து கொள். ஏனெனில் அவன் ஓர் அச்சந்தரத்தக்க மாந்தன்! உன்னல் சமாளிக்க முடியாத எதிரி. அவனின் உடலை நீ கட்டுப்படுத்தி விடலாம் ஆனல் அவனின் உள்ளத்தை (புலம்பனை) என்ன விலை கொடுத்து உன்னல் வாங்க முடியாது." —கில்பர்ட் மரே.

அச்சக அமைப்பு மூவாண்டுக் கடன் திட்டம்

(4-11-65 முதல் 23-12-65 முடிய அலுவலகத்திற்கு வந்த தொகைகள்.)

1. பத்து உருபாவகை.

வரிசை எண்	முகவரி	உருபா	சான்றிதழ் எண்
1.	து. கலியபெருமாள், ஆசிரியர், காட்டுக்கூடலூர்.	10	31
2.	வ. தமிழ்வளவன், திருவாடானை.	10	32
3.	கோ. மணிகரன், கோபிசெட்டிபாளையம்.	10	33
4.	கு. வெள்ளச்சாமி, செட்டிநாடு,	10	34
5.	மு. சதாசிவம், சங்கராபுரம்.	10	35
6.	மு. செகதீசன், சங்கராபுரம்.	10	36
7.	செ. பழனிச்சாமி, ஆளியாறு அணை, வால்பாறை.	20	37, 57
8	காரை. இறையடியான், காரைக்கால்	10	38
9	புலவர் மு. செல்வம், நெய்யூர்.	10	39
10.	அறிவன், ப்றம்புக்குடி.	10	40
11.	த. அருள்சாமி, பறம்புக்குடி	10	41
12.	புலவர் யா. ம. அல்போன்சு, செங்குடி.	10	42
13.	மெ. கி. சுந்தரமூர்த்தி, சீவலாதி.	10	43
14	பால்சாமி, பி. ஏ., பி. டி பறம்புக்குடி.	10	44
15	நீ. இராசகோபால், அரசினர் கல்லூரி, சித்தூர்.	10	45
16.	க. குழந்தைவேலு, செ. காட்டுப்பாளையம்.	10	46
17.	ச. சண்முகம், பேட்டவாய்த்தலை.	10	47

18.	வேலரங்கன், சோமையனூர்.	20	48, 71
19.	கா. செ. முத்து, பி. காட்டுப்பாகாயம்.	10	49
20.	இராச. உத்தமன், சென்னை-19.	20	50, 51
21.	பிர. துரைராசு, பறம்புக்குடி.	10	52
22.	பா. தமிழ்மணி, தஞ்சை-1.	10	53
23.	வே. நடராசன் புலவர் கல்லூரி, கரந்தை.	20	54, 55
24.	ப. கு. சுப்பையன், நம்பியூர்	10	56
25.	புலவர் திருமேனி நாகராசன், காரைக்கால்.	20	58, 59
26.	கோ. இலக்குமி நாராயணன், கீழ் அதங்குடி.	10	60
27.	அரங்க. இராசாராமன், வளவனூர்.	50	61—63
28.	புலவர் தி. நா. அறிவுஒளி, திண்டிவனம்.	10	66
29.	ஆ. கோவிந்தசாமி, ஆசிரியர், சாத்துக்குடல்.	10	67
30.	தி. ஆண்டகை, (புருடோத்தமன்) குறிஞ்சிப்பாடி.	10	68
31.	க. காசிராசா, தேவன்குடி.	10	69
32.	அ. பெரியசாமி, கண்டமாத்தான்,	10	70

100 உருபா வகை

1.	அரங்க. இராசாராமன், வளவனூர்.	100	10

அன்பளிப்பாக வந்த வகை

திருவாட்டி தங்கம் தங்கப்பா, தென்மொழி	100
கொ. சுப்பையன், இணங்களூர்.	10
அ. தெ. இரகோத்தமன்,	5
பசுமணி, பறம்பை.	2
மா. சன்னுசி, பறம்பை.	1
இராமலிங்கம், அண்டக்குடி.	1
மோட்ச அலங்காரம், சூடியூர்.	2

சுப. கந்தன், பழம்பை	2
இரா. இளவரசு, எம். ஏ., கேரளப் பல்கலைக்கழகம்	40
அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் சார்பில் இரண்டாம் முறை)	210
தே. நற்பவயா, ஆசிரியர், அண்ணாமலைநகர்.	10
அழ. அழகிரிசாமி, ஈப்போ, மலேநாடு.	200
க சிவானந்தம், திருமலைராயன்பட்டினம்.	10
தி. இராசப்பா, அரசினர் கல்லூரி, குடந்தை.	10
கே. கணேசன், பாரக்பூர்.	10
இரா. பாண்டுரங்கன், புவெ. இராமச்சந்திரன் } சிறுமுகை.	10
கே. பூங்காவனம், பாரக்பூர்.	10
தீ. ஆறுமுகம், பெரகம்பி.	5
தென்கச்சி கோ. சுவாமிநாதன், பாகாயங்கோட்டை.	10
த சரவணன், புலவர் கல்லூரி, கரந்தை	25
அ கி. மூர்த்தி, தஞ்சை-1.	10
பேரா. ச. பாலசுந்தரம், தஞ்சை-2.	10
அன்பு நிலவவன், பாகூர்.	10
சு. சீனிவாசன், குட்செட் தெரு மதுரை. கிரட்டித் தந்த தொகை : நவநீத கிருட்டிணன் கணபதி சுப்பிரமணியன், அறம் வளர்த்த சுந்தரம் ரஞ்சன் பி முருகேசன், வி. செல்லையா, சு. சீனிவாசன் ஒவ்வோர் உருபா மேனி நடராசன், மதுரை 2 உருபாவும், கண்ணபிரான், முருகேசன் 0.50 காசுகள் மேனியும்	— 10
து. சம்பத்குமார், ஈரோடு.	5
நீ. தங்கவேலன், வேலூர்-1.	3
தரங்கை பன்னீர்ச்செல்வன், மருங்கூர்.	5
அவர் வழி, மூ. வே. கந்தசாமி, ந. அரங்கநாதன், உருபா 2 மேனி	4
ந. வேலாயுதம், ப. இரேணுகாதேவி, ஓர் உருபா மேனி	2

	நன்முல்லை, மஞ்சபுத்தூர்.	20
	நா. ஆறுமுகம், நீலிக்கோனும் பாளையம்.	5
	ந. முனுசாமி, வரைகுநர், பெங்களூர்-16.	5
33	கே. ஞானசேகரன், சீராமபுரம், பெங்களூர்-21.	50

இது வரை வந்த தொகு மொத்தம்:

1	கடன் தொகை. பத்து உருபா வகை.	410
2	கடன் தொகை. நூறு உருபா வகை.	100
3	அன்பளிப்புத் தொகை:	812
	மொத்தம்.	1322
	முன்பட்டியலின் படி	1440
		2762

குறிப்பு : 1) அன்பர் சிலர் தாங்கள் திரட்டிய தொகைகளை அலுவலகத்துக்கு அனுப்பிவிட்டு இன்னும் முகவரிகள் தெரிவிக்காமல் இருக்கின்றனர். ஆதலின் அவை இப்பட்டியலில் சேர்க்கப் பெறவில்லை. முகவரிகள் வந்து சேர்ந்தபின் அவை பட்டியலில் இடம் பெறும்.

2) இப்பட்டியலில் கண்டவாறு கடன் தொகை அளித்த அன்பர் அனைவர்க்கும் சான்றிதழ்கள் 24-12-65 அன்று விடுக்கப்பெற்றன. சான்றிதழ் பெற்ற அன்பர்கள் அவற்றில் இணைந்துள்ள கிழிப்பத்தில் தங்கள் முழுக்கையொப்பமும் பக்கலும் (நாள்) இட்டு அவற்றை உடனடியாகத் தென்மொழி அலுவலகத்துக்கு விடுக்க வேண்டுகின்றோம். நன்கொடை நல்கிய அன்பர்கள் மேலும் தங்கள் பாங்கில் உள்ள தமிழ்க் கொடையாளர்களை அண்மிப் பல்லாற்றானும் உதவக் கேட்டுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

ஒரு குறிப்பிட்ட அளவு தொகை திரண்டபின்னரே அனைவருக்கும் சான்றிதழ் விடுக்கத் தொடங்குகின்றோம். அதுவரை அன்பர்கள் பொறுத்திருக்க வேண்டுகின்றோம்.

தென்மொழி அச்சக அமைப்புக்கு உடனே உதவுங்கள்!

வள்ளுவனுர் பான் முறை

புலவ, வித்துவ, ஒண். கி சந்திரசேகரன்
எம். ஏ., பி. டி., பி. ஓ. எல்.

அறன் வலியுறுத்தல் என்னும் அதிகாரம் முப்பாலுக்கும் பொருணேக்கமெய்தி முகம் போலப் பாயிரத்திறுதியினிற்பதனை யறிந்தாம். இனி, ஒழிபியல் என்னும் பகுப்பினை நோக்குதும்

படைகுடி கூழமைச்சு நட்பர ணுறு
முடையா னரசரு ளேறு (39. இறைமாட்சி: 1)

என்னும் இதனுள் குடியென்றது அதனையுடைய நாட்டினை யென்ப.

தள்ளா வினையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு (74 நாடு: 1)

என்னும் இதனுள் வினையுளென்பது உழவர் மேனின்ற தெனவும், தக்காரென்பது அறவோர், துறந்தோர், அந்தணர் முதலாயினரைக் குறிப்பதாமெனவும், செல்வராவார் கலத் தினுங் காலினும் அரும்பொருடரும் வணிகரெனவும் கூறுப. இவற்றுன் அறவோர், துறந்தோர், அந்தணர், வணிகர், வேளாண்மக்கள் ஆகியோரைப்பற்றிக் கூறுதற்குக் குடி யென்பதோர் பகுதி நாடு என்னும் அதிகாரத்தின் உறுப்பாய் வேண்ட நிற்பதாயிற்று.

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிபு (3. நீத்தார் பெருமை: 1)

''அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்''
(3 நீத்தார் பெருமை : 10)

பிறப்பினு மோத்துக் கொள்ளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும் (ஒழுக்கமுடைமை:)

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின் (நடுவுநிலைமை:)

என வருவனவற்றுன் உழவரொழிந்த ஏனையோரைக் கூறி

உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்று
தொழுவாரை யெல்லாம் பொறுத்து (1034. உழவு: 2)

என்று வரும் பொருண்மையெலாம் புலப்பட உழுவார் மேற்றாக உழவு என்னும் தனியதிகாரமொன்றினை ஒழிபியலில் இடம் பெற வைத்தார். நாட்டிற்கு உறுப்பாயடங்கும் அரணினைப் பிறிதோரதிகாரமாக அமைத்து வைத்தாற்போலக் குடியைப்பற்றி கூறக்கிடந்தன விரிவுடைமையின் அவையோரதிகாரத்துள் இடம் பெறலாகாமை நோக்கித் தனிப்பகுதியாக வைத்தோதினராதல் வேண்டும். அது பற்றிக் குடிமை முதலாக வரும் அதிகாரங்கள் அங்கவியலோடியையுடையவாய் அதனிறுதியில் வைக்கப்பட வேண்டுவனவாயின. அவ்வாறு தனிப்படுத் தோதாக்கால் நாடு, அரண் அவற்றுள் ஆக்கவும் காக்கவும் படும் பொருள் அதிகாரவியைபு இடையறுந்து போம். மேலும்,

"குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பிரியும்
நாணுடையான் கட்டே தெளிவு"
(51. தெரிந்து தெளிதல்: 2)

"மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினு முந்து" 61. மடியின்மை: 3)

"குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு"
(78. நட்பாராய்தல்: 4)

குன்றன்ன குன்ற மதிப்பிற் குடியொடு
நின்றன்னர் மாய்வர் நிலத்து"
(90 பெரியாரைப் பிழையாமை: 8)

"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் வல்வினையோ
டைந்துடன் மாண்டதமைச்சு" (64. அமைச்சு: 2)

"அன்புடைமை யான்ற குடிப்பிறந்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு" (19. தூது: 1)

என அரசியலினும் அங்கவியலினும் சுட்டிய குடிமையினைப்பற்றிய கெய்திகள் அவையொழிந்ததோர் தனி இயலகத்து இடம் பெறுதல் அமைவுடைத்தே யாமன்றே! குடி செயல்வகை யென்னும் அதிகாரத்துளோதியவை மேனிற்கும் இயல்களுள் ஓதியவற்றோடு இயைபற்று நிற்குமாற்றினைக் காட்டி வள்ளுவனாரது பான்முறையினருமையினை வலியுறுத்துதும்:

1. முதற்குறள்.

(அ) கருமமென்று தொடங்கியது எற்றுக்கெனின் :

மக்களது பெருமையும் சிறுமையும் தப்பாமல் அறியலுறு வார்க்குப் பிறப்பு பண்பு அறிவு முதலாகிய கருவிகளுளவாயி னும் முடிந்த கருவி செயலேயாகுமென்பார்

பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்" (51. தெரிந்து தெளிதல்)

என்ருராகாலனும்,

மேலாகக் கடவேமென்று கருதுவார் தாமுளராய காலத்து எல்லாராலும் நன்கு மதிக்கப்படுதலாகிய ஒளி கெடுதற்குக் காரணமாய வினையைச் செய்தலைத் தவிர வேண்டுமென்பார்

ஓஒதல் வேண்டு மொளி மாழ்குஞ் செய்வினை
யாஅது மென்னு மவர். (66. வினைத்தூய்மை:3)

என்ருராலானும்

இழிந்த கருமங்காரணமாக நாணுதல் நன்மக்கள் நாணுவ தென்பார்

கருமத்தா னாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற (102. நாணுடைமை: 1)

என்ருராகலானும்,

தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லா
ரவஞ்செய் வாராசையுட் பட்டு" (27. தவம்: 6)

என்ரு அங்கு

குடிசெய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லார்
அவஞ்செய்வார் மானத்துட் பட்டு

என்றறிவுறுத்தக் கருதினராகலானும் கருமம் என்று தொடங்கினரென்க.

(ஆ) கருமமென்பது செயற்குரியதன்றே! அற்ருகச் செய என்றது வேண்டப்படுமோ வெனின்:

தன்வினைகளுள் செய்யத்தக்கன வல்லவற்றைச் செய்த

லான் கெடும்; இனியதனுனேயன்றிச் செய்யத் தக்கனவற்றைச் செய்யாமை தன்னுனுங் கெடுமென்பார்.

செய்தக்க வல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்
(47. தெரிந்து செயல்வகை:6)

என்ருராகலானும்,

தம் வினை முற்றுதற்பொருட்டுத் தம் நிலைமையோடு பொருந்தாத திறங்களைச் செய்வாராயின் உலகந் தம்மை யிகழா நிற்கும், ஆதலான் அஃதிகழாத செயற்றிறங்களை நாடிச் செய்க வென்பார்

எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு
(47. தெரிந்து செயல்வகை:10)

என்ருராகலானும்,

அறநூலுடையார் இவை குடி செய்வார்க் குரியன வென்று உயர்த்துக் கூறிய செயல்களைக் கடைப்பிடித்துச் செய்க, அங்ஙனஞ் செய்யாது மறந்தவர்க்கு எழுமையினும் நன்மையில்லை யென்று வலியுறுத்துவார்

புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையு மில் (54. பொச்சாவாமை:7)

என்ருராகலானும்,

நூலோர் கடிந்த வினைகளைத் தாமும் கடிந்தொழியாது செய்தார்க்கு அவை தூயவன்மையின் ஒருவாற்றன் முடியுமா யினும் துன்பத்தையே கொடுக்குமென்பார்.

கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதாம்
முடிந்தாலும் பீழை தரும் (65. வினைத்தூய்மை: 8)

என்ருராகலானும்,

கடனென்ப நல்லவையெல்லாம் (99. சான்ருண்மை:1)

என்ருராகலானும், கருமம் செய என்று சொற்ருெடர்நிலை வேண்டுவதாயிற்றென்க.

(இ) ஒருவனென்பது எற்றுக்கெனின் :

மடியிலானது முயற்சிக் கண்ணே திருமகள் உறையு மென்று சொல்லுவர். குடிக்குப் பொருளின்மையானுண்டாம் இடுக்கணைத்தவிர்ப்பான் இன்ன தன்மையனாக வேண்டுமென் பார்.

"மடியிலான், தாளுளாடாமரையினுள்"
(62. ஆள் வினையுடைமை 6)

என்றாராகலானும்,

செய்யப்படும் வினைகளை முன் அடைவுபட வெண்ணி வைத்தும் முடித்தற்கு ஏற்ற கூறுபாடில்லாதார் செய்யுங்கால் அவை முடிவிலவாகவே செய்யா நிற்பார் என்பார்.

"முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர்" (64. அமைச்சு: 10)

என்றாராகலானும்,

கருத்தும் சொல்லும் செயலுந் தம்முள் மாறுகாமையா கிய செப்பமும், பழிகரிசுகளின் மடங்குதலாகிய நாணும் இற் பிறந்தார்க்கு ஒருவர் கற்பிக்க வேண்டாமல் தாமே வுளவாமாக லின் அத்தன்மையோன் குடியுயர்த்தற்குத் தக்கானென்பார்

இற்பிறந்தார் கண்ண தில்லை யியல்பாகச்
செப்பமு நாணு மொருங்கு (06. குடிமை: 1)

என்றாராகலானும்,

அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற் பாற்றன்று
(52. தெரிந்து வினையாடல்: 5)

என்றாங்கு,

அறிந்தாற்றிச் செய்கிற் பாற்கல்லால் குடிதான்
உயர்ந்ததென் றெண்ணற்பாற் றன்று

என்று வலியுறுத்துநல் கருதினராதலானும், கருமஞ் செயலை யடுத்து அதனைச் செய்ய வல்லான் ஒருவன் இத் தன்மையனதல் வேண்டுமென்மதற்கு ஒருவன் என்று வைத் தார் என்க. அன்றியும்,

முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை"
(45. பெரியாரைத்துணைக்கோடல்: 9)

போர்க் கொடைக்கு வழங்கிய பொன் !

போர்க் கொடைக்கு மக்கள் பொன்னினை வழங்க
ஆர்ப்புறு விழாவொன் றமைக்கப் பட்டது.
விழாவுக்குச் சிறப்பு விருந்தின ராக
அமைச்சர் இருவர் அழைக்கப் பட்டனர்.
அழைக்கப் பட்டவர் இருவரே எனினும்
அமைச்சர் மூவர் அங்கு வந்தனர்.
அமைச்சர் பின்னே அலுவலர் வந்தனர்
அலுவலர் அழகு மனைவிமார் வந்தனர்.
நாளொடு சுற்றுப் பயணம் நிகழ்த்ததும்
ஆளும் கட்சித் தலைவர்கள் வந்தனர்.
ஊர்தொறும் மாதர் கழகம் நடாத்தும்
வார்குழல் மங்கையர் இருபுறம் வந்தனர்.
பட்டமும் பணமும் வாய்ந்தோர் சூழச்
சட்ட மன்ற உறுப்பினர் வந்தனர்.
இத்தனைப் பெயர்களின் கரும்புநேர் உயிர்மேல்
எறும்புநேர் குறும்பர் மொய்க்கா திருக்கவே
வேட்டெஃகம் தாங்கி விழிப்புச் செய் காவலர்
கூட்டம் கூட்டமாய் வந்து குழுமினர்.
பார்த்துப் போக வந்த மக்கள்
கூத்துப் பார்க்க வந்தவர் போல
மேடையில் இருந்தோர் மேனி மினுக்கையும்
ஆடை வனப்பையும், அழகையும் பகட்டையும்
விழித்துப் பார்த்து வியந்து கிடந்தனர்.
கூட்டம் தொடங்கிற்று. குயில்போல் ஒருத்தி
பாட்டொன்று பாடினள்; அந்தப் பாட்டோ
தமிழர்க்கு நாணம் தரத்தக்க வகையில்
வடமொழிப் பாட்டாய் வந்து முடிந்தது.
அடிமைத் தமிழர்கள் அதற்கு மகிழ்ந்தனர்.
அடுத்து, மேடைமேல் அமர்ந்த தலைவர்கள்
எடுப்பாய் எழுந்தே ஒருவர்பின் ஒருவராய்ப்
போரின் கொடுமையும், போரினல் வாழ்க்கையில்

(முன்பக்கத் தொடர்ச்சி)

என்றுரைத்து,

முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பின்றே லில்லை குடி

என்று கடனறிவைத் தெருட்டுதற்கும் ஒருவன் என்று ரைனவுமாம்.

(தொடரும்)

நேரும் கடுமையும் நிகழ்த்தினர் உருக்கமாய்.
பட்டினி கிடப்போம் ஆயினும் பகைவனை
வெட்டி வீழ்த்தலே முதற்கடன் என்றனர்.
தண்டலர் அளித்த தனிச்சுவை உண்டி
உண்ட மயக்கில் இப்படி உரைத்தனர்.
மின்னும் படைக்கலன் காய்ச்சி வடிக்கப்
பொன்மிகத் தேவை என்று புகன்றனர்
வீட்டுப் பற்றினை விடுவீர் என்றும்
நாட்டுப் பற்றே நலஞ்செயும் என்றும்,
உண்ணும் உணவைக் குறைப்பீர் என்றும்,
திண்ணிய நல்லுடல் பெறுவீர் என்றும்,
இன்னல் வந்தால் ஏற்பீர் என்றும்,
பொன்னெலாம் எம்பால் போக்குவீர் என்றும்
கூடிய மக்களை வேண்டிக் கொண்டனர்.
மேடை அதிர வாழ்த்தொலி எழுந்தது.
இறுதி யாக, ஈக நெஞ்சும்
உறுதி குன்று நாட்டுப் பற்றும்
குன்றிலிட்ட சுடர்போல் விளங்கிட
நன்றே கருதும் நகர மாந்தர்
பொன்னினை வழங்கும் விழாத் தொடங்கிற்று.
முன்னமே வந்து முதல்அணி யிருந்த
அலுவ லாளர்தம் அழகு மனைவிமார்
சலசல வென்று மென்துகில் அசைய
மேடையில் ஏறினர்; நிழற்படம் பிடிப்போர்
கூடவே ஏறினர்; குறித்த முறைப்படி
வகை இது வென்றும், நெளி இது வென்றும்
கழுத்தணி என்றும் காதணி என்றும்
விழுப்புறு மங்கல நாணிது வென்றும்
ஒலிபெ ருக்கியில் உரக்க விளம்பிப்
பெயர் உயர் பதவிப் பெருமை உரைத்துப்
புகைப் படத்துக்கு முகத்தைக் காட்டி
அமைச்சர் கையில் அள்ளி வழங்கினர்.
இருகை ஏந்தி இளித்தனர் அமைச்சர்.
மாதர் சென்றதும் மற்றவர் வந்தனர்
மீதிக் கணக்குக்குப் பொன்னினை வழங்கினர்
கலனுய், கட்டியாய், நறுக்காய்த் துகளாய்ப்
பலரும் காணப் பக்குமாய்த் திரும்பி
உவப்பொடு தம்பெயர் கூறி அளித்தனர்.
அளித்த பொன்னெலாம் அரசினர் சலுகையாய்
உருமாறித் தம்பால் வரும் எனும் உறுதியால்
அவர்கட் கந்த உவகை வந்ததாம்!
அவர்கள் சென்றதும் ஆர்ப்பெழுந் தடங்கிற்று.
மேடையி னின்றோர் அலுவலர் எழுந்தார்:

''நாடு காக்கும் நல்லவர் கண்டோம்!
கேடில்லாமல் நாட்டினைப் பேணிட
ஏழை மக்களும் எழுந்துளர் என்பதை
இங்கினிக் காண்போம் என்று கூறி
அங்கொரு புறமாய்த் திரும்பினர்; அதுவரை
ஓரமாக ஒதுங்கி நின் றிருந்த
குப்பை கூட்டும் குப்பன் என்பவன்
அப்படி இப்படி மருண்டு நோக்கி
ஆடிய காலொடும் அதிர்ந்த கையொடும்
மேடையில் ஏறி விழித்து நின்றனன்.
'அஞ்சாமல் வா'ப்பா' என்றூர் அமைச்சர்.
''அஞ்சாமல் வா!'' எனப் பிறரும் அழைத்தனர்.
''இது குடியாட்சி! ஏழைகள் ஆட்சி!
ஏனே தயக்கம்?'' என்றூர் ஒருவர்.
அவருடைத் தொந்தியும் ஆனை உருவமும்
தவறிலை அவர்சொலில் என்று காட்டின.
குப்பன் துணிந்தே அமைச்சரை நெருங்கித்
தட்டித் தடவி மடியினை அவிழ்த்துத்
தாளிற் பொதிந்த பொன்னினை எடுத்தே
அமைச்சர் கையில் வைத்து வணங்கினன்.
இமைப்பில் ஆர்ப்பொலி விண்ணைப் பிளந்தது.
''குப்பன் வாழ்க! குப்பன் வாழ்க!
முப்பொழு துக்கும் சோறிலான் ஆயினும்
நாடே பெரிதாய்ப் பொன்சேர்த்து வழங்கிய
ஈகச் செம்மல் இனிதே வாழ்க!''
என்றந்த அலுவலர் எழுந்து வந் துரைத்தார்
நின்றவர் எல்லாம் வாழ்கென ஆர்த்தார்.
அமைச்சர் குப்பனை அணைத்துக் கொண்டார்.
தண்டலர் அவன்தோள் தட்டிக் கொடுத்தார்.
தனக்குப் போட்ட மாலையைத் தலைவர்
கனிவாய்க் குப்பன் கழுத்தில் சூட்டினர்
காவல் தலைவர் கைபற்றிக் குலுக்கினர்.
புகைப்படக் காரரோ புயலெனச் சூழ்ந்தனர்.
நகைமுகம் காட்டச் சொல்லிக் குப்பனை
ஒருபடிக் கிருபடி முப்படியாக
வேறு வேறு நிலைகளில் பிடித்தனர்.
கூறும் பெரும்புகழ்க் குப்பன் கதையினை
முதற்பக் கத்தில் முழுதாய் வெளியிடச்
செய்தியாளர் வரலாறு கேட்டனர்.
எய்தியார்க் கெல்லாம் ஏதேதோ கூறிக்
கூட்டம் முடியத் துடித்தான் குப்பன்.
ஆட்டம் முடிந்தது; அமைச்சர்கள் சென்றூர்.
குப்பன் கொடுத்த கொடையே பேச்சாய்

அப்படி இப்படி மக்கள் கலைந்தனர்
ஒருநா ளாயினும் 'உயர்ந்தோர்' சூழலில்
வாழ்ந்த மகிழ்ச்சியில் மனம் குதிகொள்ளக்
குப்பன் நடந்தான். சூறுக்கிட்ட ஒருவர்,
''அப்பா குப்பா! அருஞ்செயல் செய்தாய்!
தூய நாட்டுத் தொண்டில் சிறந்தாய்!
ஏய பெரும்பொன் ஏழைநீ சேர்க்க
அளவிலாத் துன்பம் அடைந்திருப் பாயே!''
என்றார்; ''ஆம்! ஆம்!'' என்றான் குப்பன்.
குறும்புப் புன்னகை உதட்டில் நெளிந்தது.
ஏனெனில் நேற்றைக் கிரவெலாம் விழித்துக்
கூனிக் குறுகிக் கும்பிருள் மறைந்து
கோவில் மாடக் கொடுமுடி ஏறிக்
கும்பத் திருந்து கொழும்பொன் சுரண்டியது
எத்துணைத் துன்பம் என்பதைக்
குப்பனே அன்றி அறிந்தார் எவரே?

—''கிண்டற்பித்தன்''

தென்மொழி, கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய விதழ்.

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
தனி இதழ்	56 காசு	60 காசு	75 காசு
ஆண்டுக் கட்டணம்	6 உருபா	7-25 உருபா	9 உருபா

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்

அட்டை நான்காம்பக்கம்	(இரு வண்ணம்)	100 உருபா
,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா
உள்ளே முழுப்பக்கம்		50 உருபா
,, அரைப்பக்கம்		25 உருபா

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

தாழ்ந்த தமிழர்.

புலவர் : தி. நா. அறிவு ஒளி.

தன்னுணர்ச்சி கெட்டொழிந்து தாழ்ந்த தமிழினந்தான்
என்றுணர்ச்சி பெற்றெழுமோ, எந்தாயே! - நன்றவித்துச்
சோற்றுக்கே கூற்றுகிச் சோர்ந்தே புரள்கின்றார்
காற்றில் புழுதிபோல் காய்ந்து.

வென்றதும், முன்னரவர் வீற்றிருந்த செம்மாப்பும்
சென்றதே, அந்தோ! சிறிதெண்ணி – நன்றெய்த
நந்தமிழர் ஆற்றாரோ? நாட்டுக் குரிமைபெற
முந்தாரோ தீமை முனிந்து ?

கூட்டுப் புழுவானர் ! கூலிக்கே மாரடிக்கும்
கேட்டு நிலையுற்றார்; கீழானர் – நாட்டுக்குள்
தாழ்ந்தே தலைகுனிந்தார்; தாமறந்தார் முன்னோர்நாள்
வாழ்ந்தே வளர்ந்திருந்த வாறு!

மானம் பெரிதென்ற மாண்தமிழர் மன்பதை
கூனும் வயிற்றுக்குக் கூனியதே! -- ஏனே
தமிழினமே வாழ்கின்றாய் ? தாழ்ந்தபின் வாழ்தல்
உமிழெச்சில் வாழ்வென் றுணர்!

தற்கிழமை வேண்டாத் தகையுடையார் யாவருளர்?
தற்கிழமை வேண்டாத் தமிழனுளன். – தற்கிழமை
ஒன்றும் உயிர்வேட்கை! உண்மை உணர்தமிழா.
நன்றே வினைக நயந்து.

நெஞ்சிற் குறியில்லார் ; நேர்மைக் கருத்தில்லார்
நஞ்சுவலிந் துண்டு நலிகின்றார் – கொஞ்சமோ
நந்தமிழர் செய்துறைகள்? நம்மவரை வாழவிடார் ;
வந்தார் முன் வீழ்வார் வலைந்து!

சின்னச் சுவைவிரும்பிச் சீர் அழிந்து வீழ்ந்துபட்டார்!
என்ன தமிழரிவர்! ஏய்ப்புண்டார் – கொன்னே
விலைந்தார்; குறியின்றி வீணராய்த் தாழ்ந்தார்
வலைந்தாரே காசுக்கு வாய்ந்து!

கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்கள் என்றவ்வை
பட்டறிவால் சொன்னதெலாம் பாழ்படுத்தார் - சுட்டால்
கரியாகும் கட்டைபோல் நற்றமிழர் பட்டார் ;
நரியார் வளர்ந்தாரே நன்று.

— ● —

நெஞ்சின் புலம்பல்

ம. இலெ. தங்கப்பா

அழுகின்ற தென்னெஞ்சம் ; தமிழை எண்ணி
அரற்றுகின்ற தென்னெஞ்சம் ; அந்த நாளில்
எழுகின்ற தமிழுணர்வில், தமிழ்நாட் டன்பில்
எம்மோடும் இணைந்தார்த்த இனிஞ ரெல்லாம்
இழிகின்ற கொள்கையராய், உணர்வு சாம்பி
எந்தமிழை அறமறந்து, மானம் போக்கி,
அழிகின்ற குடல்நிரப்பும் பொய்மை வாழ்வில்
அடங்குகின்ற புன்மைநிலை நினைந்த தாலே!

புலம்புகின்ற தென்னெஞ்சம் ; உட்கு மைந்து
பொருமுகின்ற தென்னெஞ்சம் ; யார்க்கும் அஞ்சா
வலம்புகன்று தமிழ்முனைப்பில் உணர்வு தோய்ந்து
வாழ்ந்தாலும் வீழ்ந்தாலும் தமிழ்க்கே என்று
நலம்புகன்ற மள்ளரெலாம் காலப் போக்கில்
நடைபிறழ்ந்து மனமகவோ டுலக வாழ்வாம்
சலம்புகுந்து, கொள்கையெலாம் காற்றில் தூற்றிச்
சாம்பிணமாய்க் கிடக்குநிலை நினைந்த தாலே!

தேம்புகின்ற தென்னெஞ்சம் ; செயல் மறந்து
திசைக்கின்ற தென்னெஞ்சம் ; அந்த நாளில்
ஏம்பலுறுந் தமிழ்ப்புணர்ப்பால் தனிநாட் டன்பால்
எம்முணர்வைக் குளிர்வித்த இனிய ரெல்லாம்
கூம்புகின்ற கொள்கையராய்க் குறுகி, வண்டிக்
குதிரை யெனக் கண்மறைப்பத், தமிழ்மறந்து
தாம்புகுந்த தொழில்காத்தல் ஒன்றே வாழ்வாய்த்
தளர்கின்ற தீமைதனை நினைந்த தாலே!

எரிகின்ற தென்னெஞ்சம் ; குமுறிப் பொங்கி
எழுகின்ற தென்னெஞ்சம் ; முன்னை நாளில்
விரிகின்ற தமிழுளத்தால் உயர்ந்து நின்றெம்
வேட்கைக்குத் துணைநின்ற நண்ப ரெல்லாம்
திரிகின்ற கொள்கையராய்த் தமிழை விற்றுத்,
தெவ்வரடி தொழுதேத்தி, அவ ரளிக்கும்
சரிகின்ற பொருட்குவைக்கே மாழ்கி நாளும்
சாகின்ற இழிநிலைமை நினைந்த தாலே!

வேகின்ற தென்னெஞ்சம் · செந்தமிழ்க் கே
வெதும்புகின்ற தென்னெஞ்சம் ; அந்த நாளில்
தோய்கின்ற தமிழ் மறத்தால் எம்முளத்தின்
துடிப் போடுந் துடிப்பினைத்த தோழரெல்லாம்
சாகின்ற நெஞ்சினராய்த், தமிழ்க்குக் கேடு
சார்வதனை உணர்கிலும், இன் றிருந்து நானைப்
போகின்ற உயிர்க்கஞ்சி மூலைக் கொன்றுய்ப்
போய்ப்பதுங்கும் கோழைமையை நினைந்த தாலே!

ஏன் தனித்தமிழ்?

தரங்கை—பன்னீர்ச்செல்வன்.

இவ்வில தமிழறிந்த ஒவ்வொருவர் நெஞ்சிலும் ஒருமுறை யேனும் எழும்பி மறைந்த வண்ணம் உள்ளது. இப்பெருங் கேள்விக்கு விடையிறுப்பதுபோல், உண்மைத் தமிழின் உயர்வில் நாட்டமற்ற அண்மை எழுத்தாளர் சிலர் ஆய்ந்த அறிஞர் எனத் தம்மை எண்ணிக்கொண்டு, பற்பல கருத்து களைக் கொட்டிவருகின்றனர். இவர்தம் முயற்சியும், முடிவும் தமிழுணர்வினருக்கு எழுச்சியையும், அவர்பால் இரக்கத்தை யுமே ஏற்படுத்துகின்றது.

தமிழின் மாண்புக்கு மாசூட்டுவதற்காகவும், வடமொழி வளர்ச்சிக்கு ஆக்கமளிப்பதற்காகவும், வலிந்த எண்ணத் தோடு வடமொழிப் பற்றுளர்களால் உருவாக்கப்பட்ட "மணிப் பிரவாள" நடையை மடிந்து விடாமல் பேணிக்கொண்டிருக்கும் ஒரு சிலரையும் எது தமிழ்ச்சொல் எஃது அயன்மொழிச் சொல் என்னும் மயக்கறுக்கும் முதுக்குறைவற்றோரையும், எம்மொழிச் சொல்லாயினென்? பிறர் புரிந்து கொண்டால் போதும் என்ற புதுமைப்பற்றுளரையும் தவிர, இஞ்ஞான்று பிற எவராலும் கலப்புத் தமிழ் கையாளப் படுவதில்லை என்று அறுதியிட்டுக் கூற முடியும்.

"எந்த மொழியிலும் எந்தச் சொல்லும் எப்பொழுது வேண்டுமாயினும் புகுவதுதான் தற்கால மொழி இயல்பு; அதைத் தடுப்பது வீண் முயற்சி; ஒரு விளையாட்டு." என்பன போன்ற கொள்கையுடைய எவனையும் மொழிப் பற்றுள்ளவன் என்றோ, தன்மான முள்ளவனென்றோ எவ்வாறு ஏற்றுக் கொள்ளல் சாலும்? தனித்தன்மையில் உருவாகாத ஒரு கலப் புத் திருமகனின் நெஞ்சம் அவ்வாறு கருதுவது பிழையன்று. எத்துறையிலும் தனித்துயர்ந்து செம்மாப்படைய விரும்பும் ஒரு செந்தமிழ் நெறியன் அவ்வாறு கருதினால் அவனது மொழிப்பற்றை எவ்வாறுரைப்பது?

"அன்றுடம் வளர்ந்துவரும் அறிவியல், கலை, குமுகவியல் போன்ற துறைகளின் புதிய சொற்களை நாமும் ஏற்றுக் கொண்டால் தமிழின் சொல்வளம் பெருகாதா?" என்று ஒரு சாரார் வினவுகின்றனர். இவர்தம் கூற்று, வெளிப்படை யாக நோக்குமிடத்துத் தமிழ்ப்பற்றும், அதன் வளர்ச்சியில் நாட்டமும் மிக்கோர் கருத்துப்போல் தோன்றும். உட் கருத்தை ஆய்ந்தால், நிலைமை கடலென மலைப்பூட்டும். மொழிவளம் பெருகச் சொல்வளம் மிகுதல் இன்றியமையாத தான். அதற்காக வேற்றுமொழிச் சொற்களை அப்படியே ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதுதான் பிழைபட்டகருத்து.

இவ்விடத்துத்தான் மொழிவளர்ச்சியில் தனித்தமிழ்க் கொள்கை வேறுபட்டு நிற்கிறது; மாற்றுவழி காட்டுகின்றது. தமிழில் புதிய கலைச்சொற்களை இயற்றிக்கொள்ளற்கேற்ற வேர்ச்சொற்கள் இல்லை என்னும் இழிநிலை இருந்திருப்பின் இக்கொள்கையர் கூற்று மெய்ப்பட்டு மேவும். அவ்வாறன்றி, எவ்வகையான ஆழ்ந்த பொருளுடைய மாற்றுமொழிச் சொல்லையும் ஆற்றல் குறையாமல் மொழியாக்கம் செய்யும் தமிழாண்மைக்கு எதிரே, இவர்தம் வறண்ட கொள்கை வலிவிழந்து போதல் கண்கூடு.

பிறமொழிச் சொற்களை அப்படியே ஏற்றுக் கொள்ளுவ தால் தமிழ்ச் சொல்வளம் பெருகுகிறது என்று பிழையுரை பகர்வதைக் கேட்கின்றோம். "Telephone" என்னும் ஆங் கிலச் சொல்லை "டெலிபோன்" என அப்படியே எழுதினால் தான் புதிய சொல் தமிழுக்கு வருமோ?, 'தொலைபேசி' என்று தமிழ் வேர்ச்சொற்களைக் கொண்டு புனைந்த சொல்லை வழக் கிற்குக் கொணர்ந்தால் தமிழின் சொல்வளம் மிகாதா? "ராஷ்ட்ரபதி" என்னும் வடமொழிச் சொல்லை "ஜனாதிபதி" என்று மாற்றுருவம் கொடுத்துத்தான் தமிழுக்குச் சொல் வளம் தேடவேண்டுமோ?, "குடியரசுத் தலைவர்" என்றால் குறைந்து விடுமோ? எனவே. புதிய சொற்கள் வேண்டும் என்பதற்காகப் பிறமொழிச் சொற்களைத் திருடுதலும், கடன் பெறலும் பேதைமை என்பது தெளிவு. அச்செயல் வேர்ச் சொல் அருகிய இந்திமொழி போன்ற குழவி மொழிக்கு ஒக்கும். ஏனெனில், அம்மொழியில் "டெலிபோன்" என்பது போன்ற புதிய கலைச்சொல்லை அப்படியே எழுதிக் கொள்ள வேண்டிய இன்றியமையாமை இருப்பது நேரிடைக்காட்சி. (அஃது இந்தி மொழிக்காரர்களின் பெருந்தகைமை என்று கருதிவிட வேண்டா. இந்தி மொழியைச் சிறிது கற்றாலும் அதன் இயலாமை நன்கு வெளிப்படும்.)

தன்னைத் தமிழ்ப்பேரறிஞன் என்று கருதிக்கொண்டிருக் கும் ஒருவர் அண்மையில் ஒரு கட்டுரையில் கூறியுள்ளார்:— "தனித்தமிழ் என்பது ஒரு மொழியல்ல, முயற்சி; ஒரு சுவை யான விளையாட்டு." இவ்வாராய்ச்சிப் பெருந்தகையாளரின் பேதைமையை உன்னும் பொழுது இரக்கமே மேலிடுகிறது. தமிழரின் தனிநெறியைக் குலைத்துவிட்ட, குலைவுறச்செய்து கொண்டிருக்கின்ற கும்பலின் வழித்தோன்றல் தரும் ஆய் வுரையின் அழகை என்னென்பது? பரிதியும் மாலும் வட சொற்களாம்! இதுபோதாதோ இவரது புல்லறிவாண்மைக் குச் சான்று! தனித்தன்மை குலைவதைத் தடுக்கும் தனி முயற்சி விளையாட்டென்றால், வேற்றுமொழிச் சொற்களை வேண்டுமென்றே நுழைப்பதை வினையென்று விடுப்பதா? விரகென்று தடுப்பதா?

"தனித்தமிழில் பேசுவது என்பது இன்று நடக்காது. இனியும் முடியாது. வெறும் சோற்றைமட்டும் சாப்பிட்டு விட்டு நம்மால் வாழ முடியுமா? கொஞ்சம் மற்ற உணவுப் பொருள்களையும் நாம் சேர்த்துச் சாப்பிடுவதுபோல், பிற மொழிச் சொற்களையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். காரணம், தமிழால் தனித்தமிழில் பேச முடியாது." இஃது, ஓர் அறிஞரின்(!) கூற்று! உண்மைத் தமிழன் உரைப்பதா இது? தமிழைக்கொண்டு பிழைக்கும் தருக்கன் பேச்சல்லவா? தன்னால் முடியாததெல்லாம் பிறராலும் முடியாது என்பது சிலருடைய எண்ணம். அத்தகையோர்க்கு இவர் ஓர் எடுத்துக்காட்டு! அன்றாட வாழ்க்கையின் அனைத்தையும் தனித் தமிழில் செயற்படுத்தும் பலர் இன்றும் வாழ்கின்றனர். தமிழைப்பேண இயலாது என்பது தமிழை விற்போர் கருத்தே. அன்றி மாற்றன்று.

ஆண்டுதோறும் ஐயாயிரம் வேற்று மொழிச் சொற்களை ஏற்றுக் கொண்டு ஆங்கிலம் வாழும் பொழுது, தமிழ்மட்டும் வாழாதா? என்பாருமுளர். ஆங்கிலத்தில் சொல்லாக்கம் செய்யவியலாத தன்மையால் அஃது ஏற்புடைத்தாகலாம். "ஆங்கிலம் திருந்திய நிலையை அடையும் முன்னரே, தமிழ் மேலான செம்மொழியாயிருந்தது" என மேனாட்டு (ஆங்கில) மொழியாய்வாளர்களாலேயே புகழுற்ற உயர்தனிச் செம் மொழியாம் தமிழுக்குப் பிறமொழிக் கலப்பு, தேவைக்கு அப்பாற்பட்டது.

தனித்தமிழில் எழுதினால் பொதுமக்களுக்குப் புரியாது, என உரைப்பாரும், நல்லதமிழில் எழுதுவதைக் கருந்தமிழ் எனக் கருதுவாரும் உளர். தமிழ்ப் பற்றற்றவர்களும், வயிற் றைக் கழுவுவது மட்டும் தம் வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொள்ளுவோரும் பெருகிவிட்டமையே, பொதுமக்களின் தமிழறிவுக் குறைவுக்கு முதற்காரணமாகும். "போலீஸ்காரர்" என்னாமல், "காவலர்" என்று தொடக்கத்திலேயே கூறியிருந் தால்,—"பஸ்" என்னாமல் "பேருந்து" என முதலிலேயே மொழிந்திருந்தால் இஞ்ஞான்று தனித்தமிழ்க்கு இடர்ப்பாடு தோன்றியிருக்குமா? இடைக்காலத் தமிழர்தாம் தமிழைக் குலைத்துத் தற்காலப் பொதுமக்களை நற்றமிழறியாது கெடுத்துவிட்டனர் என்றால், குறையுணர்ந்து கொண்ட தற்காலத் தமிழரேனும், பிற்காலத் தலைமுறையினர் நலம் பெற இந்நாளே உளந்தூய்மைத்தல் நன்றிக்கு வித்தல்லவா?

எனவே, தமிழர் அனைவரும் நங்கால நலத்திற்காகவும், வருங்கால வளத்திற்காகவும் தமிழரின் மாண்பை அழிக்கும் அயன்மொழிச் சொற்களை அறவே நீக்கித் தனித்தமிழைப் பின்பற்றுதல் கடனாகும். புத்தம்புதுக் கலைச்சொற்களைத் தமிழில் படைத்துப் பயன்படுத்தல் இன்றியமையாதது. ※

வள்ளுவனார் பான்முறை.

புலவ, வித்துவ, ஒண். கி. சந்திரசேகரன், எம்.ஏ., பி.டி., பி.ஓ.எல்.

2. இலக்கணங் கூறுந் திறம்:

(அ) "இன்சொலாவன: அன்போடு கலந்து, படிறில வாயிருக்கின்ற, அறத்தினீயுணர்ந்தார் வாயிற் சொற்கள்" என்றதனன் இன்சொற்கு இலக்கணங் கூறினர்:

"இன்சொலா லீர மஃதிப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்
(10. இனியவை கூறல்: 1)

(ஆ) தவத்தின் வடிவு உண்டி சருக்கல் முதலியவற்றுல் தம் முயிர்க்கு வருந்துன்பங்களைப் பொறுத்தலும், தாம் பிற வுயிர்கட்குத் துன்பஞ் செய்யாமையும் ஆகிய அவ்வளவிற்று என்று தவத்தினது இலக்கணங் கூறினர்:

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு" (27: தவம்: 1)

(இ) "யாதொருபொருள் யாதொரியல்பிற்றுய்த் தோன்றினும், அத் தோன்றியவற்றைக் கண்டொழியாது, அப் பொருளின் கணின்று மெய்யாகிய பொருளைக் காண்பதே மெய்யுணர்வாவது என்று மெய்யுணர்வினது இலக்கணங் கூறினர்:

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"
(34: மெய்யுணர்தல்: 5)

(ஈ) தன்கீழ்வாழ்வார் குற்றஞ் செய்தால் அக்குற்றத்தை நாடி யாவர் மாட்டுங் கண்ணோடாது நடுவுநிலைமையைப் பொருந்தி, அக்குற்றத்திற்குச் சொல்லிய தண்டத்தை நூலா ரோடு மாராய்ந்து அவ்வளவிற்றுகச் செய்வதே முறையாம் என்று செங்கோன்மையது இலக்கணங் கூறினர்:

"ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை" (55. செங்கோன்மை:1)

இவ்வாறே ஈகை, வாய்மை, அறிவுடைமை, பெரியார், அமைச்சர், ஒற்று, தூது, அரண், நாடு, நட்பு பேதைமையின்ன பிறவற்றிற் கெல்லாம் விரிவாக இலக்கணம் இயம்பியுள்ள வாறும் அறிதும். இவற்றை விரிவஞ்சிக் கூறிற்றிலம்.

3. உள்வழிப்படுங் குணமும், இல்வழிப்படுங் குற்றமும் கூறுமிடம்:

(அ) அறத்துப்பாலில்,

எல்லாரு மொழுக்கத்தானே மேம்பாடெய்துவர், அதனினின் றிழுக்குதலானே தாமெய்துதற்கு உரித்தல்லாத பழியையெய்துவர் என்பார்:

"ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தின்
எய்துவ ரெய்தாப் பழி" (14. ஒழுக்கமுடைமை: 7)

என்றுரைக்குமிடத்து ஒழுக்கமுள்வழிப்படுங்குணமும், இல்வழிப்படுங்குற்றமுங் கூறினர். பிறவுமன்ன.

4. உடையாரதுயர்ச்சியும், இல்லாதாரது இழிபும் கூறுமிடம்:

களிறு புதையாகிய அம்பால் புண்பட்டவிடத்துத் தளராது தன் பெருமையை நிலைநிறுத்தும்; அதுபோல ஊக்கமுடையார் தாம் கருதிய வுயர்ச்சிக்குச் சிதைவு வந்தவிடத்துத் தளராது தம் பெருமையை நிலைநிறுத்துவர் என்பார்,

சிதைவிடத் தொல்கா ருரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டுன்றுங் களிறு" (60. ஊக்கமுடைமை: 7)

என்றதனன் ஊக்க முடையாரது உயர்ச்சியைக் கூறினர்.

"பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்" (60. ஊக்கமுடைமை: 8)

என்றதனன், ஊக்கமிலாரது இழிபு கூறினர். இவ்வாறு வருவன பலவுள.

5. வழி (உபாயம்) உரைத்தல்:

அறத்துப்பாலில்,

வலியார்முன் றன்னை நினைக்க தான் றன்னின்
மெலியார் மேற் செல்லுமிடத்து"
(25. அருளுடைமை: 10)

என்றதன்கண், "தன்னின் வலியார் தன்னை நலியவரும் பொழுது அவர்முன் தானஞ்சி நிற்கும் நிலையினை நினைக்க; அருளில்லாதவன் தன்னின் எளியார்மேல்தான் நலியச் செல்லும் பொழுது" என்றுணர்த்துமிடத்து அருள் பிறத்தற்கு வழி கூறினர்.

"இன்னாசெய் தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்"
(32. இன்னாசெய்யாமை: 4)

என்றதன்கண், "தமக்கின்னாதவற்றைச் செய்தாரைத் துறந்தார் ஒறுத்தலாவது, அவர்தாமே நாணுமாறு அவர்க்கு இனிய வைகளைச் செய்து அவ்விரண்டனையும் மறத்தலாம் என்று இன்னாசெய்தாரை வெல்லும் வழி கூறினர்.

பொருட்பாலில்,

"கொடுத்தலும் இன்சொலும் ஆற்றி னடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப் படும்" (53. சுற்றந்தழால்: 5)

என்றதனன், ஒருவன் சுற்றத்திற்கு வேண்டுவன கொடுத் தலையும் இன்சொற் சொல்லுதலையும் வல்லனயின், தம்மில் தொடர்ந்த பல்வகைச் சுற்றத்தானே சூழப்படும் என்று கூறலுறுவார் சுற்றத்தாரைத் தம்மின் பிரியாமை நினைத்தற்கு வழிகூறினர்.

"இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து"
(54. பொச்சாவாமை: 9)

என்றதனன், சோர்வாற் கெட்டாரையுள்ளவே, நாமும் அவ் வாறே கெடுதுமென்று மகிழ்ச்சிக்கண் மைந்துரு ரெனவே பொச்சாவாமைக்கு வழி கூறுகிரூர். இவ்வாறு வருவன பலவுள.

6. தலைமை கூறுதல் :

"யாமெய்யாக் கண்டவற்றுளில்லை யெனைத் தொன்றும்
வாய்மையின் நல்ல பிற" (30. வாய்மை: 10)

இதனுள், யாம் மெய்ந் நூல்களாகக் கண்ட நூல்களுள் யாதொரு தன்மையானும் வாய்மையின் மிக்கனவாகச் சொல் லப்பட்ட பிற அறங்களில்லை யென்பார் அறத்தினது தலைமை கூறினர்.

"அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்"
(21. தீவினையச்சம்: 3)

என்றதனன், தம்மைச் செறுவார் மாட்டும் தீயவினைகளைச் செய்யாது விடுதலைத் தமக்கு உறுதி நாடும் அறிவுகளெல்லா வற்றுள்ளும் தலையாய அறிவென்று சொல்லுவர் என்று தீவினைக்கு அஞ்சும் அறிவினுக்குத் தலைமை கூறினர். இவ் வாறே,

"பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை"
"நிலையஞ்சி நீத்தாருள் ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை" (33. கொல்லாமை: 5)

இன்னோரன்னவை பலவுள. இவற்றைப் பிறுண்டு விளக்குதும்.

7. செய்யுந்திறங் கூறுதல் :

(1) மருத்துவனயினன் பிணியாளன் மாட்டு நிகழ்கின்ற நோயை அதன் குறிகளான் இன்னதென்று துணிந்து, பின் அது வருதற் காரணத்தை ஆராய்ந்து தெளிந்து, பின் அது தீர்க்கும் வழியினை யறிந்து, அதனைச் செய்யும் வழிப் பிழையா மற் செய்தலும், அவ்வாறு வழியறிந்து செய்யுங்கால் பிணியா ளன் அளவினையும் அவன்கண் நிகழ்கின்ற நோயினளவினை

யும், தன் செயற்கு ஏற்ற காலத்தினையும், மருத்துவ நூல் நெறியால் நோக்கியவற்றோடு பொருந்தச் செய்தல் வேண்டு மென்பார்,

"நோய்நாடி நோய்முதல் நாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"
"உற்ற ளவும் பிணியளவுங் காலமும்
கற்றன் கருதிச் செயல்" (95. மருந்து: 8-9)

என மருத்துவன் நோய் தீர்த்தற்குச் செய்யு மாற்றினைக் கூறினர்.

(2) பகைத்திறந் தெரிதல் என்னும் அதிகாரத்துக்கண் மாறுத பகையை யாக்குதற் குற்றமும், முன்னாகி நின்ற பகையுள் நட்பாக்கற் பாலதும், நொதும லாக்கற்பாலதும், அவற்றின்கட் செய்வதும், ஏனைக் கூறுதற்பாலதன்கட் செய்வனவும், கூறையும் பருவமும், கூறையாக்காற் படுமிழுக்கும் என்று இத்திறங்களை நன்கு ஆராய்ந்து நவில்கின்றார். இவ்வாறே, விருந்தோம்பல், தவம், ஆள்வினையுடைமை, உழவு முதலிய அதிகாரங்களுள்ளும் அவ்வவற்றைச் செய்யுமாறு அறிவுறுத்துகின்றார்.

இனி, இனியவை கூறலென்னும் ஓரதிகாரத்தின்கண் வரும் பொருட் பகுதியினைக் காட்டுதும்:

1. இன்சொற்கு இலக்கண மாமாறு:
"இன்சொலா லீர மளஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்" (1)

2. இன்சொல் விருந்தோம்புதற்கட் சிறந்ததாதல்:
"அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்(து)
இன்சொல ஞகப் பெறின்" (2)
"முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தா
னின்சொ லினதே யறம்" (3)

3. இனியவை கூறுவார்க்கு இம்மைப் பயன்:
"துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉ மின்சொ லவர்க்கு" (4)
"பணிவுடைய னின்சொல ஞத லொருவற்
கணியல்ல மற்றுப் பிற" (5)

4. மறுமைப்பயன்:
"அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின்" (6)

5. இருமைப்பயனும் ஒருங்கெய்துதல்:
"நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றகுப்பரியாச் சொல்" (7)



மொழியிழக்கமாட்டோம்! சரசா, சென்னை-கஉ.

பணமும், அழகும், பழகும் உறவும்
சினமும், உலகும், இருக்கும் நிலையும்,
புகழே பரவப் புரியும் செயலும்
திகழும் உடலும், திரியும் உயிரும்
அறவே இழப்போம், அணியம்!—எனினும்
பெருமை உயர்ந்த பிழையில் தமிழை
வகையும் நலமும் வளமும் உரமும்
முகமும் முடியும் முதலும் இலையாய்
வழியினில் வந்த வடமொழிக் காக்கி
மொழியிழக்க மாட்டோம் முனைந்து!

(முன்பக்கத் தொடர்ச்சி)

"சிறுமையு ணீங்கிய வின்சொல் மறுமையும்
இம்மையு மின்பந் தரும்" (8)

6. இன்னாத கூறலின் குற்றம்:

"இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது" (9)

"இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" (10)

இவை யொருவாரும்.

இங்ஙனம் அதிகாரந்தோறும் நுவலும் பொருளியல்புக் கேற்றவாற்றுன் பகுத்துப் பகருமவற்றை அரண் (அதி 75) பெரியாரைப் பிழையாமை (அதி. 90), நன்றியில் செல்வம் (அதி. 101) முதலியவற்றுள் காணுதும். இத்துணைப் பாகுபா டெல்லாம் அறன் வலியுறுத்தல் என்னு மதிகாரத்துக்கண் சூறிப்பிற் புலப்பட நிறுத்திய புலமை மாட்சி வியக்கத்தக்க தொன்றுமன்றே! (தொடரும்)

சங்கு...!

மு. மகிழரசன், சென்னை-சசு.

ஆறிலே சாவுண் டதுதப்பி உய்ந்திடினும்
நூறிலே சாவு நெருங்கிவிடும்—தேறிநம்
தென்றமிழர் மானம் மறம்மாட்சி என்றுகளம்
சென்றுரென் றூதேடா சங்கு.

தானை புறப்பட்டால் நின்றெதிர் தாங்கஎத்
தானைவந் தாலுமுயிர் தப்பாதே!—வானைப்
பிளந்தார்க்கும் வண்டமிழர் வெந்திறலைப் பாடிச்
சளைக்காமல் ஊதேடா சங்கு.

மணக்கோலம் பூணுங்கொல்? மற்றதற்கு முன்னுளே
பிணக்கோலம் பூண்டிந்தி போகும்—துணைகூட
ஆற்றல்சால் நம்மோர் அடிவீழ்ந்து விம்முமெனச்
சாற்றியே ஊதேடா சங்கு.

எல்லா உயிர்க்கும் இகல்கூற்றம் நல்லநெறி
இல்லார்க் கறம்கூற்றம்! இவ்வுலகில்—பொல்லாத
இந்தியெனும் மந்திக் கினிக்கூற்றம் யாமென்றே
செந்தமிழா ஊதேடா சங்கு!

இடுகாடும் இன்றிச் சுடுகாடும் இன்றி
வடநாட்டார் இந்திவெறி வற்றி—முடைநாற்றம்
வீசும் பிணநாற்றம் பொய்த்து விடுமென்றே
ஓசைபட ஊதேடா சங்கு.

எழுக தமிழர்!

கோம்பை-தி. காசியப்பன்

அறைகூவிடும் உயர்தாய்மொழி அழகோடுணர் தமிழா!
அறிவேகனை தமிழேதுனை எனவேநினை தமிழா!
குறைகூறிட இயலாமணிக் குறளோதிடு தமிழா!
குறள்கூறிடும் நெறிகோடிடாக் குரலாயொலி தமிழா!
நிறைகூறவை தனிலேவழக் குறையாடிடும் அமையம்
நினையாதிரு பிறிதோர்மொழி உறவாகிய நவையை!
மறைவாய்வரும் குறைதோய்மொழி மருண்டோடிட எழுந்து
மலையேவரின் இமையாதிரு மலையாதிரு நிமிர்ந்து!

அறையேதர முயலாமையும் அழகோ?புலி உருவே
அரிமாவெனும் உனைமோதிடல் நரியாலியல் செயலோ!
மறையோடுயர் அறங்கூறிடும் வளநாடிது எனினும்
மறநூல்பல உளநாடிது மறவாதிரு தமிழா!
முறைகோடிய வடநாயினர் நமையாளவோ சிறிதும்
முரணுவொரு முடிவோடெழு குறியோடெழு தமிழா!
திறைவாங்கிய மறவேந்தரின் திருவே,தமிழ் மகனே
திருநாடிதை நமதாக்கிடத் திரளோடெழு உடனே!

புலம்பற் பத்து. —மணிமாறன், சென்னை-கரு.

சொல்லெடுத்துத் தமிழ்பழித்த வடவாசர் செருக்கொழிய
வில்லெடுத்துப் போர்தொடுத்து மாற்பகைவர்த் துமித்திமயக்
கல்லெடுத்தே உருவமைத்துக் கற்பசி புகழ்நிறீஇப்...
புல்லெடுத்து நெல்விளைத்துப் புவியாண்ட திருமகனே!

முன்வைத்த காலிப்பின் வைத்தறியா மூவேந்தர்
மன்வைத்த புகழ்மரபின் வழிவந்த பெருமகனே
புன்வைத்த நெஞ்சத்துப் புலிவடவ ரிவண்போந்து
பொன்வைத்த நின்னுட்டைப் பாழாக்கற் காணுயோ?

காயாடுங் கனியாடுங் காவோடு காராளர்ப்
போயாடும் வயற்சூழ்ந்து பல்வளஞ்சேர் தமிழ்நாட்டை
நாயாடும் காக்கையொடு நரியாடுங் கழுகாடும்
பேயாடும் பிணக்காட்டைப் போலாக்கற் காணுயோ?

பாடுபட்டுங் குமுறுகின்ற பசியடக்க வழியின்றிக்
கூடுவிட்டுக் கூடுபுகும் வித்தையினைப் போற்சொந்த
நாடுவிட்டு நாடேகி நெஞ்சொடியக் கல்லுடைத்தும்
வீடுவிட்டு வீடேகி மடியேந்தற் காணுயோ?

வாட்கொண்டு போர்வென்ற வரலாற்றை மறந்தனையோ?
கோட்கொண்டு போயிற்றே கோதற்ற தமிழ்மானம்?
தாட்கொண்டு பகையரசர்த் தலைமிதித்த உனைவடவர்
தாட்கொண்டு மிதிக்கின்ருர் தமிழ்மகனே உணர்ந்திலையோ?

கத்திக்குங் குண்டுக்கும் கலங்காத நெஞ்சத்தோய்!
எத்திக்கும் புகழ்பரப்பி எஞ்ஞான்றும் நிறைவழுவாத்
தித்திக்குஞ் செந்தமிழைத் தீத்திறத்தா ரிந்தியெனுங்
கத்திக்கே இரையாக்கற் காணுயோ? காணுயோ?

வந்தாரை வரவேற்று வாழ்வளித்த தமிழணங்கு
சென்தாரைக் குருதியொடு சிந்துகண்ணீர் துடைக்கவுயிர்
தந்தாரைத் தன்மானந் தனைக்காக்கச் செந்தீயில்
வெந்தாரைப் பார்த்தபின்னும் வீறுணர்ச்சி எய்திலையோ?

முறமெடுத்துப் புலியெதிர்த்த மறத்திபெற்ற மைந்தா!தொல்
புறமெடுத்துப் பாடிமகிழ் பாவலனே! பழந்தமிழர்
திறமெடுத்துச் செப்பும்நாத் திறன்மிக்காய்! வடக்கிவண்
மறமெடுத்துக் கோலோச்சும் வலியடக்க வாராயோ?

படமாட்டே னினித்துன்பம் ; பற்காலு மடிமையராய்
வடநாட்டா ணடிவருடி வாழ்வார்தஞ் சொன்னம்பிக்
கெடமாட்டே னெதுவரினுங் கடுங்கூற்றே யெதிர்வரினும்
விடமாட்டே னென்னுட்டை வேற்றினத்தா ளுளவென்றே.

சூளெடுத்துச் சூழ்ச்சிபல செய்துவரு பகையொடுக்கத்
தோளெடுத்துத் தலைமிதித்துக்கூத்தாட வாராயோ?
வாளெடுத்துச் சங்கொலித்து வெங்களத்து மதியாரைத்
தாளெடுத்துத் தலைமிதித்துக் கூத்தாட வாராயோ?

அருவியழகு! —இரா. கிள்ளிவளவன், இரும்புதலை.

உள்ளம் அழுந்தி ஒளிர்தமிழ் ஆய்வார் உணர்வு மேன்மேல்
துள்ளிக் குதிக்கும் அதுபோல் தொலைவில் துளிக்குமுகில்
வெள்ளிப் பனிவரை வெய்யோன் கதிரால் விரைந்தொளிர
வெள்ளித் திரையெறிந் தாடும் அருவி வியன் அழகே!

இல்லை கவலை எனச்சொலு வார்உளம் எப்படியோ
தொல்லை புதைபொருள் தொட்டவர் உட்களிப் பெப்படியோ
கொல்லும் வறுமைக் குறையழித் தார்மகிழ் வெப்படியோ
துள்ளுமே யப்படித் தொட்டுச்செல் காற்றும் துளிபெறவே!

பிறப்பின் பெரும்பணி யாற்றல் பெரிதுங் கடன்அதையான்
மறப்பின் எனக்கொரு மாண்பும் இலையே எனவுரைத்து
வரப்பார் தடவயல் வாங்கும் புதுநீர் வளம் கொழித்தே
தரைப்பால் நடந்தெழில் காட்டும் அருவி தனியழகே!

பிறரைத் திருத்துக! —ப. காளிமுத்து, மதுரை-கூ.

அன்பெனும் விளக்கைக் கொண்டே அறிவிலா மாந்தர்க்கெல்லாம்
இன்பமே நல்கும் கல்வி ஏற்றிட வேண்டும் தோழா!
துன்பமே இங்கு வேண்டா! தொல்லைகள் இல்லை என்போம்
வன்புசெய் உளத்தார் எல்லாம் மடிவதே முடிவென் றுகும்!

கரும்புளி சின்னே ரத்தில் கரியவோர் கொள்க லத்தை
அருவிநீர் வெண்மை போல ஆக்குதல் கண்டாய் தோழா!
உருவுடை மனத்தார் தம்மை எப்புளி விளக்க வேண்டும்?
அருவுடை அன்பின் கல்வி அணிபெற விளக்க வேண்டும்!

தமிழ்மகள் நடந்து சென்றால் தமிழ்த்தெய்வ மென்பாரந்நாள்
தமிழ்மகள் நடக்கின் றாளே தளிருடல் வெளியிற் காட்டி!
உமிழ்கிறார் அறிஞர் எல்லாம்! உணர்வதும் எந்நாள் ஐயோ!
கமழ்ந்திடும் நமது பண்பு கலையினைல் கொலையா யிற்றே!

திருக்குறள் படிப்பா ரோடு தீராத நட்புக் கொள்வாய்
திருத்திடு பிறரை! உன்னால் தெளி ந்தவர் பலராகட்டும்
வருத்திடும் வறுமை கண்டு வாடிடா நெஞ்சம் கொள்வாய்!
இருப்பது தமிழர் நாட்டில் என்ப தை மறந்தி டாதே!

எந்த நாளோ? —பெ. கோ. மலையரசன், ஈப்போ.

தேனூறும் செவ்விதழைக் காட்டி என்றன்
சீருளத்தைக் குளிர்விக்கச் செய்வித் தேநீ
கானூறும் கவின்காட்சி முகத்தில் தேக்கிக்
கயல்மீனைப் போலென்றன் முன்னே துள்ளி
வானூரும் அன்பாலே பண்பி னாலே
வரும்பொழுதும் போம்பொழுதும் வேட்கை ஊட்டி
ஏனைநீ அங்கிருப்பாய்! உன்னை விட்டே
இவ்வைய மீதினில்நான் தனியாய் நின்றேன்!

உனைப்பிரிந்த ஏக்கத்தால் தொடியும் என்றன்
உள்ளத்தில் அமைதியில்லை; உணர்வும் இல்லை
இணைபிரிந்த அன்றிலென இடரால் இங்கே
எப்பணியும் ஓடாமல் இமையா(து) உன்றன்
நினைவாலே துயருற்றுந் துயிலு மற்று
நின்னுருவில் யான்பெற்ற இன்பம் எண்ணி
வினையாற்றி மீளுங்கால் விழியால் நீயும்
வியப்பூட்டி முன்வந்து மறைந்து செல்வாய்!

அப்பாவென் றேயழைத்தும் 'அம்மா' என்றும்
அரியதொரு பெரும்பேற்றை அளித்த உன்னை
ஒப்பாக்கிப் பார்க்கின்றேன் பொருட்கள் தம்முள்
ஒன்றேனும் உனக்குநிகர் கண்டேன் இல்லை!
முப்பாலில் சொன்னனே புலவன் என்னுள்
முடிசூட்டிக் களிக்கின்றாய் உள்ளம் பொங்க
எப்பொழுது நான்கண்டு மகிழ்வேன்? எந்தம்
இன்பத்தின் எதிரொலியாம் மகவே நின்னை!

குழலினிமை யாழினிமை தோற்கப் பேசும்
குலமகனே! உனைத்தூக்கிக் கொஞ்சி ஆடி
மலர்க்கையால் தொட்டிலிட்டுத் தமிழ்ப்பண் பாடி
மகிழ்வூறத் தாலாட்டி நினைவால் வாடிப்
பழவாயில் முத்தமிடப், பாய்ந்து துள்ளிப்
பாய்ந்தணைத்தே உன்னப்பா பாராய் என்றே
அழகாட்டும் அருந்தளிரை ஆட்டி நிற்கும்
அருங்காட்சி யான்காணும் நாளெந் நாளோ?

'எத்தருக்கு ஓலை' —கு. க. பிறைசூடிப்பித்தன், கோழுமம்.

பிணந்தழுவ ஆவலெனில் பிறக்கட்டும் சட்டம்!
பிறந்தவுயிர் சாகத்தான்! பிறகென்ன கெட்டோம்?
இனந்தழுவி வளர்த்தமொழி இந்திக்குத் தீனி
என்றுன பின்னரினி இருந்தென்ன மேனி?
பனங்காட்டின் சலசலப்பில் பணிந்துவிடோம் கண்டீர்!
பாம்பாட்டும் மகுடியெனப் பதவியினைக் கொண்டீர்!
தினைப்புனத்தில் கிளிகளெனத் திருவிடத்தில் வந்தீர்!
திங்களொரு தடைச்சட்டத் திருத்தத்தைத் தந்தீர்!
வெங்களத்துச் சாக்காட்டில் வெடிமுழங்கும் வேளை!
வேக்காட்டால் உள்நாட்டில் வோறுக்கும் வேலை!
எங்களினம் தூங்குகின்ற ஏமாளிக் கூட்டம்!
என்பதனால் போடுகின்றீர் இருட்டறையில் ஆட்டம்!
திங்களுக்கோ இரவினில்தான் தேருலவும் ஆட்சி;
'தீப்பந்து' கீழ்த்திசையில் ஏறிவிட்டால் வீழ்ச்சி!
எங்களுக்கும் காலம்வரும் இன்றன்று நாளை!
இன்தமிழைக் கருவழிக்கும் எத்தருக்கிவ் வோலை!

இறவாப் பெருஞ்சாவு! இரா. இளவரசு எம். ஏ.

வைதல்: மண்ணில் நழுவி எழிற்கனியாய்,
மலர்க்கை காலால் தாளமிட்டு
விண்மீன் விழியில் மொழியவிழ
வினேதேன் மலர்வாய் மழலைமொழிப்
பண்ணில் உலகைக் குளிர்விக்கும்
பச்சை மகவுகள் தம்மையும், நீ
கண்ணீர் சொரியக் கொடுஞ்சாவே!
கைக்கொள் கின்ருய். முறையிதுவோ?

ஊரின் நடுவே கனிகுலுங்கும்
உயர்ந்த மரமாய் உலகென்னும்
தேருக் காணி போல்நாளும்
திறந்த விழிகள் மூடாமல்
பாருக் குளுற்றும் தொண்டரையும்
பறிக்கின் ருய்நீ கொடுஞ்சாவே!
ஆரோ பொறுப்பார் எம்விழிநீர்
அருவி யாக்கும் நின்செயலே?

கட்டிளங் காளையர் கன்னியரைக்,
கடிமணம் புரிந்த நல்லிணையை
வெட்டுகின் ருய்நீ, அம்மட்டோ!
வெந்துயர் அடக்கி, விருப்படக்கிக்
கட்டிக் கரும்பைப் பெறுந்தாயைக்
கண்ணிலி யேநீ முறிக்கின்ருய்.
பட்ட மரமோ? வல்லிரும்போ?
பாருங் கல்லோ நின்னுளமே?

வாழ்த்தல்

மீமிசை மாடம் மிதக்குநரும்
மிகச்சிறு மண்குடில் முடங்குநரும்
காமனே வென்றிகொள் கவினியரும்
காணக் கண்கூசும் பிணியினரும்
ஆமை அடிமை விழையுநரும்
அரிமா விடுதலே முழக்குநரும்
ஊமை சொன்மழை பொழியுநரும்
ஓர்ந்திடில் உன்முன் ஒன்ருவார்.
வாழ்வெனும் ஒருவன் அணைப்பினிலே
மனவளம் செல்வம் சிலருக்கே,
தாழ்வெனும் ஆழ்கடல் அமுக்குண்டே
தளர்வார் தவிப்பார் பலர்இங்கே.
ஏழ்மை செல்வம் உடைமையெனும்
ஏற்றத் தாழ்வை நின்னுலகில்
ஆழ்ந்து தேடினும் கண்டிலனே
அதனுல் நின்னே வாழ்த்துவனே!

(அவர் நினைவாக)

அமைச்சரவை திருந்தவேண்டும்



(தி.பி. ஈஈஈஈ, நளி உக குயில் ஏட்டில் பாவேந்தர் எழுதிய ஆசிரியவுரை. அற்றைச் சூழலில் பாவேந்தர்க்கிருந்த கொதிப்பையும் பதைப்பையும் இற்றைத் தமிழர் உன்னுவாராக.)

பாவேந்தர் பாரதிதாசன்.

தமிழ்நாட்டுக்குச் சென்னை இராச்சியம் என்றுதான் பெயர் சொல்ல வேண்டும் என்று தில்லிப் பேரரசு சொல்லியது, சரி கிடக்கட்டும், இதற்காக நாம் பேரரசை எதிர்ப்பானேன் என்றது சென்னை அமைச்சரவை; ஆனல் தமிழர்களின் உள்ளம் அந்த வகையில் வருந்திக் கிடப்பது பொய்யன்று.

இந்தியைத் தமிழகத்தில் பரப்பத்தான்வேண்டும் என்றது தில்லி. சரி கிடக்கட்டும் என்றது சென்னை அமைச்சரவை. ஆனல் தமிழர்களின் உள்ளம் அந்த வகையில் துடி துடிப்பதில் குறைச்சல் இல்லை.

சாதி இருக்கத்தான் வேண்டும், பார்ப்பனப்பசங்களே பேணிப் புரக்கத்தான் வேண்டும் என்றது தில்லி. சரி கிடக்

(முன்பக்கத் தொடர்ச்சி

வேண்டல்

உள்ளமும் உதடும் வேருனேர்,
ஊர்முதல் அடித்தே உலையிடுவோர்,
கொள்ளைப் பொருளைப் பெரும்பாலோர்
கும்பி கருகக் குவித்திருப்பார்,
கள்ளர் தம்மையும் சாவே! நீ
கதறக் கதற உலகுய்ய
அள்ளிக் கொள்க! வாழ்வளிக்க
அன்பர் தூயர் ஏழையர்க்கே!

பள்ளன் பறையன் படையாட்சி
பார்ப்பான் எனுங்குலத் தாழ்வுயர்ச்சி
உள்ளத் தேற்று நடப்பவரை
உயர்ந்த தாய்மொழி, தாய்நாட்டை
எள்ளள வேனும் போற்றுமல்
எள்ளித் தாழ்த்தும் இழிபிறப்பைக்
கொள்ளை யிடுக! வாலாற்றைக்
கொடுக்கும் இறவாப் பெருஞ்சாவே!

கட்டும் இதற்காகப் பேரரசை எதிர்ப்பானேன் என்றது சென்னை அமைச்சரவை. ஆயினும் தமிழர் உள்ளம் எரிமலை யாகிக்கிடக் கின்றது என்பதில் ஐயமில்லை.

திராவிட மொழியாராய்ச்சியின் பெயரால் தமிழின் மேன் மையை ஒழித்துக்கட்ட தெ.பொ. மீக்கழைக் குழுவாக ஏற் படுத்தத்தான் வேண்டும் என்றது தில்லி. சரி கிடக்கட்டும்; இதற்காகப் பேரரசை நாம் எதிர்த்துக் கொள்வானேன் என்று சும்மா இருந்துவிட்டது சென்னை அமைச்சரவை. ஆயினும் இந்த வகையில் தமிழர்கள் உள்ளம் புண்பட்டது ஆறவில்லை.

வானொலியை 'ஆகாசவாணி' என்றுதான் சொல்லவேண் டும் என்றது தில்லி. சரி இருக்கட்டும்; இதற்காகப் பேர ரசை நாம் எதிர்ப்பானேன் என்று தூங்கிக் கிடந்தது சென்னை அமைச்சரவை. ஆயினும் தமிழர் உள்ளம் அடைந் துள்ள கொதிப்பு இன்னும் ஆறவில்லை. புடைகொண்டுதான் வருகின்றது.

கோயிலில் வடமொழி வழிபாட்டு முறைதான் இருக்க வேண்டும். தமிழ் கிமிழ் இருக்கக் கூடாது என்றது தில்லி. சரி இருந்துபோகட்டும்; இதற்காகப் பேரரசின் பகை எதற்கு என்று முக்காடு போட்டுக் கொண்டு படுத்துக் கிடந்தது சென்னை அமைச்சரவை. ஆயினும் தமிழர் உள்ளம் படும்பாடு ஆலைவாய்ப் பஞ்சுபடாது. பட்டுக் கொண்டுதான் இருக் கிறது.


'சிறீ'தான் வேண்டும் 'சிறீமதி'தான் வேண்டும் என்று சொல்லிற்றுத் தில்லி. சரி கிடந்து போகட்டும்; இதற்காக நாம் ஏன் பேரரசைப் பகைத்துக் கொள்வது என்று மானத்தை ஒரு பக்கம் தூக்கிப் போட்டுவிட்டு மூலையில் கிடக்கிறது சென்னை அமைச்சரவை. ஆயினும் இதுவகையில் தமிழருள்ளம் படும்பாடு தமிழர்தாம் அறிவார்கள்.

நாட்டைக் கெடுத்த இராசாசியின் நண்பர்: காட்டிக் கொடுத்துப் பிழைக்கும் கயமை உடையவர்: ஏட்டுத் தமிழின் இன்னலுக்கு வேலைத் தீட்டிக்கொடுக்கும் தீயர் ஆகிய தெ.பொ.மீ ஞட்சி சுந்தரன் தலைமையிலா தமிழ்ச் சொற்கள் அகரவரிசை நூல் புதுக்கும் குழு அமைப்பது?

சென்னை அமைச்சரவைக்கு ஓர் இறுதி வேண்டுகோள்.

தமிழின் பகைவரைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் இந்தக் குழுவினர் அனைவரையும் மாற்றுக.

'ஏ அமைச்சரவையே'! உன் மானமற்ற—துணிவுள்ள—தான் தோன்றித்தனமான போக்குக்கும் ஓர் எல்லை இல்லையா?



மகாவலை

தமிழனுக்கு வடவன் கற்றுத்தரும்

சிலப்பதிகாரம் !

அன்புள்ள ஆசிரியர்க்கு,

வணக்கம். ஐயா, இவ்வாண்டு தமிழகப் பள்ளியிறுதி மாணவர்க்குப் பாடமாக இந்தி நூல் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. இந்நூல் மாக்மில்லன் வெளியீட்டகத்தால் வெளியிடப் பெற்று, அரசினர் ஒப்புதல் பெற்றுள்ளதாகும். இந்நூலில்தான் தமிழன் பண்புக்கு மாறான செய்திகள் வேண்டுமென்றே புகுத்தப் பெற்றுள்ளன. தமிழிலக்கியங்களுள் செம்மணியாம் சிலப்பதிகாரத்தில் சில காட்சிகள் நாடக வடிவில் இப்பாடநூலில் தரப்பட்டுள்ளன. மனையாளின் சிலம்பை விலை கூற மதுரை வந்த கோவலனைத் தன் இருப்பிடத்தே இருக்கச் செய்த பொற்கொல்லன் தன் பழிதுடைத்துக்கொள்ளும் ஆவலுடன் பாண்டியனை நோக்கி ஆவலுடன் ஓடிவருகின்றான். அப்பொழுது பாண்டிய மன்னன் களியாட்டுக் கூடத்தில் காட்சி தருகின்றான்! எப்படிப் பட்ட நிலையில்? மதுவுண்டு மயங்கிய நிலையில்!

வளைந்த செங்கோலை இன்னுயிர் தந்து நிமிர்த்திய தகவு வாய்ந்த நெடுஞ்செழியன், ஆரியப்படை கடந்தான் என ஆன்றோரும் சான்றோரும் போற்றிய பாண்டிய மாமன்னன் நங்கையொருத்தி நடனமாட, கையிலே மதுக்கிண்ணத்தை ஏந்தி மது அருந்திச் சுவைத்துக்கொண்டே அறிவுத் தெளிவின்றிக் காட்சிதருகின்றான்! அப்பொழுது பொற்கொல்லன் வந்து கையில் ஒற்றைச்சிலம்போடு அரசியின் சிலம்பு கவர்ந்த கள்வன் என்னிடம் அகப்பட்டுள்ளான்'' என்று கூறுகிறான். ''நேரந் தெரியாமல் வந்து விட்டாயே!'' எனச் சினங் கொள்கின்றான் பாண்டிய மன்னன்! ''அச்சிலம்பைக் கைப்பற்றுங்கள், அதோடு காணுமற்போன மற்றொரு சிலம்பையும் கேளுங்கள்; கொடுக்க மறுத்தால் கொன்றுவிடுங்கள்'' எனக் கட்டளையிடுகின்றான்.

மன்னன் மதுக்கிண்ணமும் கையுமாக மதிமயங்கி ஆட்டக்காரியின் ஆட்டத்தில் ஈடுபட்டுக் கிடக்கின்றான். இடையிட்ட பொற்கொல்லன் மேலும் எரிந்து விழுகின்றான்! காணுமற்

போன சிலம்புகளோ இரண்டு! அகப்பட்டதொன்று தவிர மற்றென்றையும் கேட்டு, மறுத்தால் கொன்று விடுங்கள் என்ற ஆணை!

எப்படியிருக்கிறது சிலப்பதிகாரம்! தமிழனுக்குத் தமிழன் கதையினையே வடவன் கற்றுத்தரும் முறையைப் பார்த்தீர்களா? சேக்சுபியர் நாடகங்களுந்தாம் பிறமொழிகளில் சுருக்கமாகவும், கதை வடிவிலும் தரப்படுகின்றன. இப்படியொரு கதைக்கொலை இதுவரை நடந்திருக்கின்றதா? நடந்தால் விடுவரா ஆங்கில மக்கள்? இந்த மானங்கெட்ட தமிழனும் அவனின் அரசும் தான் இதுவரை இதுபற்றிக் கவலைப் படவில்லை! தமிழ் நெறியில், தமிழர் பண்பாட்டில் தீ வைப்பதற்கென்றே எழுதப் பட்ட இந்த நாடகத்தைத் தமிழ் மாணவர்களே படிக்குமாறு தமிழக அரசே வைத்துள்ளதை எண்ணுகையில் யாருடைய நெஞ்சமுத்தத்தைப் பாராட்டுவதென்றே புலப்படவில்லை

இதனைக் கண்ணுறும் சட்டமன்ற உறுப்பினர்களே, நீங்கள் பங்குபெற்றுள்ள தமிழக அரசுதான் இவ்விழிவுக்குப் பொறுப்பு. இதனைத் துடைக்க ஆவன செய்வது உங்கள் கடமையன்றே! தமிழ்ப்புலவர்களே, தமிழாசிரியர்களே, இந்த, இந்திப்பாட நூலின் குறும்புத்தனத்தை ஆட்சியினர்க்குணர்த்தி உடனே இந்நூலைத் தடைசெய்ய ஆவன செய்யுங்கள்!

சென்றதெலாம் போக, எஞ்சி இருக்கும் மான உணர்வின் மேல் நம்பிக்கை வைத்துக்கேட்கிறேன்; தமிழன் என்ற உணர்வில் ஆளும் அரசை, அமைச்சர்களை வேண்டுகிறேன்; இந்த இழிவினை மாற்றித் தமிழரசு என்பதை நிலைநாட்டித் தன்மானத் தமிழர்களாகத் தலைநிமிர்ந்து நில்லுங்கள்!

ஐயா, இச்செய்தியை விளக்கி முரசொலி, நம்நாடு, குறள்நெறி, கல்கி, நவமணி, தினத்தந்தி ஆகிய ஏடுகட்கு மடல் எழுதினேன். முன்னைய மூன்றுமே இதனை வெளியிட்டன. ஆனால் காலத்துக்கேற்பத் தமிழ், தமிழர், தமிழர் பண்பாடு என்று பேசித் தமிழரை ஏய்க்க முயலும் கல்கியோ, 'உயிர் தமிழுக்கே' என்போரின் தினத்தந்தியோ, நவமணியோ மடலினை வெளியிடவேயில்லை — என்பதையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, ஒரு தவற்றினைச் சுட்டிக்காட்டி எழுதப்பெற்ற மடலைக்கூட வெளியிட மனமில்லாத — அந்த அளவுக்குத் தமிழ்ப்பற்றில்லாத இத்தாளிகைகட்கும் என் வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
புலவர் அரி. தென்னகன், கடலூர்-2.

மணிமொழிமாலை: ★

கருங்கற்சுவர்களால் எழுப்பப்பெற்ற சிறையோ, இரும்புக்கம்பிகளால் ஆகிய கூண்டோ ஒருவனைக் கட்டுப்படுத்துவன அல்ல. தூய அமைதியான உள்ளங்கட்கு அவை இனிய பாழிகளாம். உள்ளத்தால் தன்னுரிமை உடையாரைப் போல் விடுதலையின்பம் நுகர்வோர் யாவர்?

—இலவ்லேசு.

சட்டங்கள் எளியாரை நசுக்குகின்றன. செல்வர்களோ சட்டத்தைக் கைக்குள் போட்டுக்கொள்ளுகின்றனர்.

—கோல்டு சிமித்து.

சட்டத்தை மக்களுக்குப் பாதுகாவலாக அமையுங்கள்! அவர்களை அச்சுறுத்தும் பூச்சாண்டியாக்கி விடாதீர்கள்!

—சேக்சுபியர்.

பொது மேய்ச்சல் நிலத்திலிருந்து கோழியைத் திருடுபவனைச் சட்டம் தண்டிக்கிறது. ஆனால் கோழிகளிடமிருந்து பொது மேய்ச்சல் நிலத்தையே திருடிக்கொள்ளும் பெருந்திருடனையோ அவிழ்த்து விட்டுவிடுகிறது.

—பெயர் தெரியா ஒருவர்.

ஒரு நாட்டு மக்களின் ஒருமித்த அறப்போராட்டத்தின் முன் எந்த அரசும் நெடுநாள் நிலைத்து நிற்கமுடியாது.

—காந்தியடிகள்.

விடுதலை தானே வலிய வருவதில்லை. மக்கள் தம் எழுச்சியால் தான் அதனைப் பெறவேண்டும்.

—கால்டன்.

விடுதலை தவறுகட்கிடங்கொடுப்பதுதான். ஆனால் கொடுங்கோலாட்சியோ நாட்டைச் சாகடித்து விடுவதாயிற்றே!

—மாட்டியோட்டி.

அடிமையாயிருந்து உடல் கொழுப்பதினும் உரிமை வாழ்வில் உடல் இளைத்திருப்பதே மேல்.

—ரே.

அரசியல் என்பது என்ன? செல்வரை வறியரிட மிருந்தும், வறியரைச் செல்வரிடமிருந்தும் பாதுகாப்பதாகக் கூறிச் செல்வரிடமிருந்து பொருளையும் வறியரிடமிருந்து ஒப்போலைகளையும் பெற்றுக் கொள்வதுதான்.

— பெயர் தெரியா ஒருவர்.

கோணல் மாணலான சட்டங்களே கொடுங்கோலாட்சியின் கொடுமைகளின் கொடுமுடி!

— பர்க்கு.

கொடுங்கோலர்களை எதிர்த்து நிற்பது இறைவனுக்குப் பணிவதாகும்.

— தாமசு செபர்சன்.

கொடுங்கோலரும், மக்களின் குருதி நீரில் குளிப்போரும் நெடுநாள் ஆட்டம்போடுவர் என்று அஞ்சத் தேவையில்லை அவர்கள் நிற்பது அக்குருதியாற்றின் இடிகரை விளிம்பு என்பதைத் தெரிந்துக்கொள்!

— செல்லி.

எப்பொழுதும் உண்மை கொலைக்களத்தில்தான்;
பொய்மை அரியணையில் தான்!

— லோவல்.

உண்மையைச் சிறையில் அடைத்தாலும் சரி; நிலத்தைத் தோண்டிப் புதைத்தாலும் சரி; அது வெடித்துக் கிளம்பியே தீரும். அப்படி வெடித்துக் கிளம்பும் பொழுது அதன் எரிமலைக் கொதிகுழம்பு வழியிற் குறுக்கிடும் அனைத்தையும் அழித்தே தீரும்

— எமிலி சோலா

இழிவுக்கும் இழிவான செயல்களே சிறைச்சாலைகளில் களைகளைப்போல் வளர்ந்தோங்குகின்றன. மாந்தனிடமுள்ள இயல்பான நல்ல தன்மைகள் அங்குப் பாறிப் போகின்றன.

பைரன்.

பெருஞ்சான்றோர்களோடு நின்று தவறிழைத்தாலும் இழைப்பேன். ஆனால் இழிதகை மாக்களோடு சேர்ந்து சரியான வழியில் கூட நடக்க மாட்டேன்.

சிசரோ.

தப்பு தோல்வியைச் சமாளிக்காது. சரியானது சமாளிக்கும்.

தாகூர்.

ஆட்சி நலத்தோடு நடக்க வேண்டுமானால் அவ்வப் பொழுது மக்களின் சிறு சிறு எதிர்ப்புகள்தாம் அதற்குச் சரியான மருந்து.

—செபர்சன்.

கொடுங்கோலர்களின் குருதி நீரைப் பாய்ச்சித்தான் விடுதலை மரத்தை வளர்க்க முடியும்.

—பெர்ட்ரண்டு பாரேர்.

மண்டியிட்டுக் கொண்டு வாழ்வதை விட நிமிர்ந்து நின்று சாவோம்!

—ரூசுபவல்ட்டு.

படைவலிவால் நிலைநாட்டப்படும் அதிகாரத்துக்கு எப்பொழுதும் குலைநடுக்கந்தான்!

—கொசுத்து

படை வலிவு எல்லாவற்றையும் வெல்லும். ஆனால் அதன் வெற்றி முழக்க மெல்லாம் எத்தனை நாள்?

—ஆபிரகாம் லிங்கன்.

உண்மையான பேரறிஞன் யார் என்பதை எளிதில் கண்டு கொள்ளலாம். எவ்வாறெனில் மடயர்களெல்லாம் ஒன்று சேர்ந்து அவனுக் கெதிராகச் சூழ்ச்சி செய்து கொண்டிருப் பார்கள்!

—சுவிப்டு.

கைகொடுத்து உதவுவீர்! ★ ★ ★

தென்மொழி படிக்கும் இளைஞர்களே, நங்கையர்களே, ஆசிரியர்களே, புலவர்களே, தென்மொழியால் நீங்கள் பயன் பெற்று வந்திருப்பது உண்மையாயின், தென்மொழியின் தன் னலமற்ற பொதுப்பணி மேலும் சிறந்தோங்க வேண்டுமாயின், அச்சக அமைப்புத் திட்டத்திற்கு உங்கள் மேலான பங்கினை இன்றே செலுத்துங்கள்! கடன் திட்டத்தில் பங்குபெற முடியாதவர்கள் ஆளுக்கு ஓர் உருபாவேனும் நன்கொடையாக அளியுங்கள்! நீங்கள் விடுக்கும் ஒவ்வோர் உருபாவும் தமிழ் விடுதலையாம் கட்டிடத்துக்கு நீங்கள் எடுத்துக் கொடுக்கும் ஒவ்வொரு செங்கல் என்பதை உன்னுங்கள்! தொடரட்டும் உங்கள் வினை! மலரட்டும் தமிழுரிமை!

—அமைச்சர்.

இவ்விதழைப் படிப்போர் ஒவ்வொருவரும் காணவேண்டிய அறிக்கை.

தென்மொழி தொடங்கி ஏறத்தாழ நான்காண்டுகள் ஆகி விட்டன. இதுவரை தென்மொழி எத்தனையோ கைகளில் தவழ்ந்திருக்கும் எத்தனையோ மனங்களில் குடி புகுந்திருக் கும். எத்தனையோ பெயர்கள் தென்மொழியின் ஏறுநடையால் வீறுமுழக்கால் கவரப்பெற்று அது வழங்கிய கருத்துக் கரு வூலத்தினை இலக்கிய செல்வத்தினை நுகர்ந்து பயன் பெற்று மகிழ்ந்திருப்பர். தென்மொழியை ஊன்றிப் படிப்போர் எவரே யாயினும் அவர் தென்மொழியால் நல்லுணர்வு ஏற்றப் பெரு திரார். அத்தகையோர் தென்மொழிக்குத் தங்கள் கடனை ஆற்ற வேண்டாவா? தென்மொழி ஆசிரியர் தாம் தொடங்கிய அச்சக அமைப்புத் திட்டத்தினைச் செவ்வனே நிறைவேற்றி முடிப்பதற்குள், இடையில் தம் தளராத் தமிழ்ப்பணி காரண மாக அரசினரால் சிறைப்படுத்தப்பட்டுள்ள இந்த நெருக்கடி வேளையில் அவ்வச்சக அமைப்புத்திட்டத்தினைத் தொடர்ந்து வெற்றியாய் முடிக்கத் தம் பங்கினை செலுத்த வேண்டாவா? தற்பொழுது தென்மொழி தமிழகமெங்கணும், மலை நாட்டிலும் ஈழத்தும் தமிழர் உறையும் பிற பகுதிகளிலும் படிக்கப்பெற்று வருகின்றது இதழை வாங்குபவர் ஏறத்தாழ மூவாயிரம் பெயர்களாவது இருப்பர் என்று கூறலாம். அன்பர்பால் பெற் றுப் படிப்பவர்களைக் கணக்கிடின் அது பல்லாயிரமாக விரியும். இன்று தென்மொழிக் கேற்பட்டிருக்கும் இடர்ப்பாட்டு நிலை சொல்லுந் தரமன்று வினையாற்றலே உருவாகிய ஆசிரியரோ சிறையில்! அவரால் தொடங்கப்பெற்ற அச்சக அமைப்புத் திட்டமோ அரைகுறையில்! சூழ்நிலைக்கேற்பத் தன் நடையை நெளித்துக்கொண்டும் கொள்கையை வளைத்துக் கொண்டும் செல்லாமல் சீரிய நோக்கோடு நேரிய பாதையில் செம்மாந்த நடையிடும் காரணத்தால் தென்மொழிக்கு ஏற்படுவன எதிர்ப் பும் இடர்ப்பாடுமே யல்லாமல், அணைப்பும் துணையும் எள்ளத் தனையுமில்லை! அச்சக அமைப்புத்திட்டம் வெளியிடப் பெற் றுப் பன்னாட்களாகியும் இன்னும் தேவையான தொகை திரள வில்லை. அன்பர்தம் உள்ளங்களில் நல்லுணர்விருந்தும் அது கீண்டப்பெருவாறு உலகியல் எண்ணங்களால் அமுக்கப் பட்டுக்கிடக்கின்றது என்றுதான் கூறவேண்டும். நிலையற்ற பொருள்கட்காகவும், தற்காலிகத் தேவைகட்காகவும், தோன்றி மறையும் நொடிப்பொழுதைப் விருப்பங்கட்காகவும், உலகியல் வெற்று வினைப்பாடுகட்காகவும் பெருந்தொகையைச் செலவிடும் அன்பர்கள் தாம் செலவிடும் தொகைதான் எவ்வளவு. அதனால் விளையும் பயன்தான் என்ன என்பதைச் சற்றே நின்று எண் ணிப் பார்ப்பராயினும் போதும் உண்மை புலனாகிவிடும். இது வரை தம் கைகளிற் புரண்டு சுவடின்றி மறைந்த பொருள்தான்

எத்தனைப் பெரியது. அதனைஞெடு ஒப்பிடுங்கால் தென்மொழி தங்களிடம் வேண்டும் தொகை எத்தனைச் சிறிது என்பது புலனுகாமற் போகாது. தென்மொழிக்கு அன்பர்கள் தரும் காசு ஒவ்வொன்றும் நிலைப்பாடான வினைக்கே. அதன் விளைவு இத் தமிழகம் உள்ளவரை நிலை நிற்கும். தென்மொழி இதழன்று; இயக்கம்! தமிழக மறுமலர்ச்சி இயக்கம்; நல்லுணர்வியக்கம். உண்மைத் தமிழரின் உரிமை முழக்கத்தினை உலகுக்கே உணர்த்தும் இயக்கம்! அதன்பணிக்கு உதவுவது தமிழரின் கடன். இதழைப் படிக்கும் ஒவ்வொருவரும் இதனை எண்ணின் போதுமே! தங்கள் பங்காக ஒவ்வொருவரும் ஒவ்வோர் உருபா அன்பளிப்புத் தரினும் போதுமே! மூவாயிரம் பெயர்கள் ஆளுக்கு ஓர் உருபா அளிப்பினும் மூவாயிரம் உருபாக்கள் திரளுமே!

ஆம்! இதழைப் படிக்கும் அன்பர்களே, மாணவர்களே, இள நங்கையர்களே, ஆசிரியர்களே புலவர்களே, அரசியல் ஈடுபாட்டினரே, குமுகாயத் தொண்டரே ஒவ்வொருவரும் ஒவ்வோர் உருபா அளியுங்கள் போதும்! தென்மொழியை இது வரை இலவசமாகப் பெற்றுப் படித்துவந்திருக்கும் தமிழ்ப் பேராசிரியன்மார்களே! இதுவரை நீங்கள் தென்மொழிக்கு ஒரு நன்றிச் சொல்தானும் பகர்ந்ததில்லை. இப்பொழுதாவது உங்கள் நன்றிக் கடனுக ஒவ்வோர் உருபா அனுப்பி வையுங்கள்! தமிழரின் உணர்வு உண்மைதானு என்று உரசிப் பார்த்துக்கொள்ள இஃது ஓர் உரைகல்! இன்றே உங்கள் பங்கை அளியுங்கள்! தென்மொழி அச்சக அமைப்பு நன்கொடைத்திட்டம் என்ற குறிப்பில் நீங்கள் பணம் அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர்,

தென்மொழி, கடலூர்-1.

—அமைச்சர்.

தமிழன்பர்க் கொரு நல்லவாய்ப்பு! ★★★

தமிழறிவுக்கு அடிப்படையானவும் வேண்டப்படுவனவுமாகிய 'வரலாறு' 'இலக்கணம்' 'மொழிநூல்' ஆகிய முத்துறைகளிலும் மொழியறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் எழுதும், வாழ்நாளெல்லாம் வைத்துப் போற்றத் தக்க அரிய ஆராய்ச்சிக்கட்டுரைகள் இனித் தென்மொழியில் தொடர்ந்து இடம் பெறும் என மகிழ்வுடன் அறிவித்துக் கொள்கின்றேம்!

(உ—ர்.)

கடன் பட்டியல் ● ● ● ஒரு திருத்தம்.

26 ஆம் பக்கம், நான்காம் வரியில்

கே. ஞானசேகரன், சீராமபுரம், பெங்களூர்-21. உருபா 50. என்றுள்ளது. இத்தொகை அவர்வழித் திரண்ட தொகையாகும். அத்தொகையை வழங்கியோர் :

'தென்முரசுக்குழு', அலசூர், பெங்களூர்-8. அன்பர்கள் : திருவாளர்கள். கி. நாகராசன், சு. கிருட்டிணன், ஆ.ச.சோமசுந்தரம், மு. சு. மணி. அ. பங்கிராசன், கி. சங்கரநாராயணன், அர. கோதண்டபாணி, மு. து. ராமலிங்கம், பொ. நல்லமுத்து ஆகியோர் ஒவ்வோர் உருபா மேனி உருபா. 9

பெங்களூர் சீராமபுரம் அன்பர்கள் : க ஞானசேகரன் (4.53.), கோ. கிருட்டிணன் (2.22.), கோ.நடராசன், கு இரத்தினமணிவேலன் (2 உருபா மேனி), ப. மு. வெங்கடேசன், செ. லோகநாதன், ந. சண்முகம், பொ. நடராசன், அ. வெங்கடேசன், கு. செல்வராசன், — ஒவ்வோர் உருபா மேனி 16.75

ஐ. டி. ஐ. பெங்களூர்-16. அன்பர்கள் : தை. சண்முகம், மு. சரவணம், இரா. பத்மநாபன், சி. க. நாதன். அ. இராமலிங்கம். மு. சு. மூர்த்தி, இரா. ஆல்பர்ட் பீட்டர், சி. நத்தானியல், இரா. வேல்முருகன், கா. மு. சு. மணி, பெ. தியாகராசன், ம. சு. இராசன். ப. நம. பார்த்தசாரதி, அ.சு.மணியன், வே தமிழ்ச்செல்வம், கசேந்திரன். தாமசு, க. சி. ஆஞ்சநேயன், முருகு. பாலியன், வே கி. சனர்த்தனன், மு. சுந்தரராசு. சு. இராதாகிருட்டிணன், அ.அனந்தராமன், வெ.பரசுராமன், ஒவ்வோர் உருபா மேனி 25

பணவிடைக் கழிவு 0.75

முகவர்கள் கவனத்திற்கு : ● ● ●

* ஒவ்வோர் ஆங்கில மாதமும் 5-ம் நாளுக்குள் முந்தைய மாதப் பட்டியல் தொகையைக் கட்டாயம் விடுத்துவிகிலும்.
* படிகள் சரிபார்த்தே விடுக்கப்பெறுவதால், இடையில் ஏற்படும் குறைபாடுகளுக்கு அலுவலகம் பொறுப்பாகாது.
* தேவையான மிகுதிப் படிகட்கு முன்கூட்டியே எழுதவும்.

— அமைச்சர்.

தமிழர்களின் கைவேல்!

தமிழ் நாட்டின்விடுதலை முரசம்!

தமிழர்களுக்குக் கிடைத்த உரிமைப் பட்டயம்!

தமிழ் நாட்டில் இயங்கும் ஒரே தனித்தமிழ்த் தாளிகை!

தென்மொழி

தென்மொழி என்றும் தன் கடமையை ஆற்ற வேண்டாமா? புல்லர்தம் பொய்மைச் சூழ்வலைக் கிடையிலும் தமிழ்ப் பகைவர் களின் புரட்டுப் பேச்சுகளுக் கிடையிலும், தென்மொழி தயங்காது பாடாற்ற அதன் அச்சக அமைப்புக்கு உதவுங்கள்.

கடனுகவும், நன்கொடையாகவும், தங்கள் அன்பான, மேலான உதவியை இன்றே அனுப்பி உதவுங்கள்.

தென்மொழி,
கடலூர்-1.

மித்திரா அச்சகம் கடலூர்-1

